The Bible Standard

(தமிழ் வெளியீடு)



"உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்." சங். 43:3

"LIFT UP A STANDARD FOR THE PEOPLE"
Isaiah 62:10

Translated from
BS#952
Jan-Feb 2026

பொருளடக்கம்

✡ வார்த்தைகளுக்கு அர்த்தம் உண்டு 2

✡ நல்ல சமாரியன் 11

✡ அறிவிப்பு 20

வார்த்தைகளுக்கு அர்த்தம் உண்டு

Words do have meaning

சட்டவாக்கியம் 2026 - சங்கீதம் 141:3

"கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்: என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்"

நாளின் மன்னா கீதம் 5 - வருடாந்திர கீதம் 154 - உலகின் ஒளி.

"என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்" என்பதே இந்த வசனத்தின் முக்கிய செய்தியாகும். தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளை தேவனுக்கு அவகீர்த்தியை உண்டாக்கும் எந்த வகையிலும் மரியாதை குறைவாகப் பேசக்கூடாது. எரேமியா 23:28 நமக்கு பல விஷயங்களைத் தெளிவுப்படுத்துகிறது, **"என் வார்த்தையுள்ளவனோ, என் வார்த்தையை உண்மையாய்ச் சொல்வானாக."** பின்வரும் இந்த வார்த்தைகளால் நாம் ஒருபோதும் குற்றவாளிகளாகக் காணப்படாதிருப்போமாக: **"மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும்."** (சங்கீதம் 144:8). இரகசியம் காக்கும் தன்மையைப் பற்றிய புரிதலை இப்போது நாம் சிந்திப்போம். மறைக்கப்பட வேண்டிய விஷயங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு வழியாக நமது வார்த்தைகள் உள்ளன. இதுபோன்ற சந்தர்ப்பங்களில் மறைக்கப்பட வேண்டியவைகள் வெளிப்படுத்தப்படாதவாறு நம் நாவுகளுக்கு நாம் கடிவாளம் போட வேண்டும். உண்மையில், இரகசியம் காக்கும் தன்மையைப் பயிற்சி செய்ய முதன்மையான வழி, நமது நாவையும் நமது வார்த்தைகளையும் கட்டுப்படுத்துவதே ஆகும். இது ஒரு பழமொழியை நினைவூட்டுகிறது: எலும்பில்லா நாவு எதையும் பேசும்.

நமது உணர்வுகளின் வெளிப்பாடுகள், நமது வார்த்தைகள் மற்றும் செயல்கள் ஆகியவற்றிற்கு கட்டுப்பாடுகளை விதிப்பது தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளையின் கடமையாகும். கட்டுப்படுத்துவதன் வடிவத்தில் இரகசியம் காக்கும் தன்மையில் மிகவும் கடினமானது யாதெனில், வெளிப்படுத்தக் கூடாததை வெளிப்படுத்தும் உணர்வுகளை தனக்குள் அடக்கிக் கொள்வதன் மூலம் மறைப்பதாகும். மற்றவர்களுக்குத் தெரிந்து விடக்கூடாது என்று நம் உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் திறனைப் பொறுத்தவரையில், பல வருட கால பயிற்சியின் மூலமே அத்தகைய தேர்ச்சியைப் பெற முடியும். இரகசியம் காக்கும் தன்மையின் மறுபகுதி சாமர்த்தியமாகும். இது பொருத்தமற்ற உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை மறைக்கும் வழிகளில் நமது உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை நிர்வகிக்கும் குணப்பண்பாகும். இது ஒருவர் அடைய



விரும்பும் பலன்களைப் பெறும் வகையில் பொருத்தமான உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது. மேலும் கரத்திலுள்ள நோக்கத்தை அடைவதற்கு வாய்ப்பாக உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை மாற்றும் வகையில் அவைகளை நிர்வகிக்கிறது; ஏனெனில், சாமர்த்தியம் நல்ல பலன்களைப் பெறுவதற்காக காரியங்களை திறம்படவும் சரியாகவும் நிர்வகிக்கிறது.

எனவே இரகசியம் காக்கும்தன்மையானது கையிலிருக்கும் காலம், இடம், நபர், சூழ்நிலைகள், கோட்பாடுகள், தப்பெண்ணங்கள், மனப்பான்மைகள், பழக்கவழக்கங்கள், இலட்சியங்கள், நோக்கங்கள் முதலியவற்றின் தேவைகளைக் கருத்தில் கொண்டு அவற்றுக்கு இசைவாகச் செயல்பட்டு, நல்ல பலன்களைப் பெற அவற்றை ஞானமாய் உபயோகிக்கிற அதே வேளையில், மனதில் கொண்ட நோக்கத்திற்குத் தடையாக அமையும் உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளைத் தொடர்ந்து தவிர்த்து, மனதில் கொண்ட நோக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் உணர்வுகள், வெளிப்பாடுகள், வார்த்தைகள் மற்றும் செயல்பாடுகளை உபயோகிக்கிறது. இதில் எந்தவொரு வஞ்சகமும், இரட்டை வேடமும், பொய்யும், மாய்மாலமும் தவிர்க்கப்பட வேண்டும், இதனால் அதன் குறிக்கோள்களை அடையும் முயற்சியில் வஞ்சகம் செய்ததாகக் குற்றவாளியாகாது; ஏனெனில், தீமையைச் செய்யும்படியாக அல்ல, மாறாக பொல்லாப்பைத் தடுத்து

COURTESY BY :
The Bible Standard -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor**, **Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates**: **One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** *www.biblestandard.com*

நன்மையை அடைவதற்காகவே, இரகசியம் காக்கும் தன்மையை தேவன் நமக்குக் கொடுத்தார்.

ஆகையால், மெய்யான இரகசியம் காக்கும் தன்மையையுடைய சாமர்த்தியம் நல்லது, ஆகவே இயேசு-வானவர் தம்முடைய சீஷர்களுக்கு **"ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல, இதோ, நான் உங்களை அனுப்புகிறேன்: ஆகையால், சர்ப்பங்களைப்போல விவேகமுள்ளவர்களும் புறாக்களைப்போலக் கபடற்றவர்களுமாய் இருங்கள்"** (மத்தேயு 10:16) என்று கட்டளையிட்டபோது, அதைக் கடைப்பிடிக்கக் கற்பித்தார். அப்போஸ்தலன் யாக்கோபு, அது பரத்திலிருந்து உண்டாகி வருகிற ஞானம் என்றும், நல்ல கோட்பாடுகளுடன் இணக்கமாக உள்ளது என்றும் விவரித்துக் கூறுகிறார், **"பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும், சாந்தமும், இணக்கமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது."** (யாக்கோபு 3:17). அத்தகைய சாமர்த்தியமும் அத்தகைய கட்டுப்படுத்துதலும் நேர்த்தியான இரகசியம் காக்கும் தன்மையின் பகுதிகளாகும்.

இரகசியம் காக்கும் தன்மை, வேதாகமத்தின் அடுத்த பண்பாக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. வேதாகமம் ஒரு வெளிப்பாடு என்ற கருத்திற்கு மாறாக, அதன் பண்புகளில் ஒன்று இரகசியம் காக்கும் தன்மை என்று கூறுவது, முதலில் முரண்படுவதாகத் தோன்றலாம். இருப்பினும், வேதாகமம், பகுத்தறிவு மற்றும் நிகழ்வு உண்மைகள், இரகசியம் காக்கும் தன்மை வேதாகமத்தின் பண்புகளில் ஒன்று என்பதை நிரூபிக்கின்றன. இதன் மூலம் வேதாகமத்தில் உள்ள அனைத்தும் இரகசியமானது என்று நாம் புரிந்து கொள்ளக்கூடாது; மாறாக, தேவன் பொதுவான மனுக்குலத்திடமிருந்து, அதாவது தேர்ந்தெடுக்கப்படாதவர்-களிடமிருந்து, இரகசியமாக வைத்திருக்க விரும்பும் இரகசியங்கள் அங்கே உள்ளன. இதனை பல நோக்கு நிலைகளிலிருந்து உண்மை என்று வேதாகமம் காட்டுகிறது. வெளிப்படுத்துதல் 5:1-ல் தேவனுடைய வார்த்தை உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப் பட்டுள்ள ஒரு புத்தகமாக (சுருள்) குறித்துக்காட்டப்படுகிறது. வெளிப்புறத்தில் எழுதப்பட்டவை வேதாகமத்தின் எளிதான மற்றும் வெளிப்படையான விஷயங்களை, அதாவது அதன் வரலாறுகள், அதன் பெரும்பாலான கட்டளைகள் மற்றும் புத்திமதிகள் மற்றும் அதன் சில கோட்பாடுகள் போன்ற-வற்றைக் குறிக்கின்றன. அதே சமயம், ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டு உள்புறமாக எழுதப்பட்டவை வேதாகமத்தின் இரகசிய அம்சங்களைக் குறிக்கின்றன, அவற்றில் எதையும், ஏற்ற காலத்தில் இயேசு அந்த இரகசியத்தின் முத்திரைகளைத் திறந்து, தேவன் தேர்ந்தெடுத்த ஜனங்களுக்கு அதில் உள்ள காரியங்களை விளக்கும் வரை புரிந்துகொள்ள முடியாது (வெளிப்படுத்துதல் 5:9). மறைத்து வைக்கப்படுதல் பற்றிய இதே சிந்தனை ஏசாயா 6:2-ல் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது; இதில் கூறப்பட்டுள்ள சேராபீன்கள், தேவனுடைய நான்கு மாபெரும் குணப் பண்புகளான ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பு ஆகியவை வேதாகமம் எங்கும் நிறைந்துள்ளன, இவை சேராபீன்களாக உருவகப் படுத்தப்பட்டு, பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளைத் தங்களின் இரண்டு அடையாளமான செட்டைகளாகக் கொண்டு மூன்று அம்சங்களில் செயல்-படுவதால் ஆறு செட்டைகளாகக் குறித்துக் காட்டப் படுகின்றன, முகத்தை மூடியிருக்கும் இரண்டும் இந்த இரண்டு ஏற்பாடுகளும் சத்தியத்தை எவ்வாறு மறைக் கின்றன என்பதைக் குறிக்கின்றன (2 கொரிந்தியர் 4:6), மற்றும் கால்களை மூடியிருக்கும் இரண்டும் இந்த இரண்டு ஏற்பாடுகளும் தேவனுடைய இரகசிய கிரியைகளை எவ்வாறு மறைக்கின்றன என்பதைக் குறிக்கின்றன, மேலும் பறக்கின்ற இரண்டும் இரண்டு ஏற்பாடுகளும் காலத்திற் கேற்ற சத்தியத்தை எவ்வாறு வெளிப்படுத்தி, தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதில் எவ்வாறு அதனைச் செயல்பாட்டிற்குக் கொண்டுவருகின்றன என்பதைக் குறிக்கின்றன. மாற்கு 4:11,12-ல் இயேசுவும் இதே விளை-வுக்கு சாட்சியங்கொடுக்கிறார்: **"தேவனுடைய ராஜ்யத்தின் இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருளப்பட்டது: புறம்பே இருக்கிறவர்களுக்கோ இவைகளெல்லாம் உவமைகளாகச் சொல்லப்படுகிறது: அவர்கள் கண்டும் காணாதவர்களாகவும், கேட்டும் உணராதவர்களாகவும் இருக்கும்படி, இப்படிச் சொல்லப்படுகிறது என்றார்."**

நம் ஆண்டவர் தமது முதல் வருகையின் போது, தம்முடைய சீஷர்கள் என்ற சிறு கூட்டத்திற்குத் தமது மரணம், தமது பரமேறுதல் மற்றும் இவற்றின் அவசியம் பற்றிய செய்திகளை படிப்படியாக வெளிப்படுத்தினார். ஏனென்றால், எல்லா யூதர்களையும் போலவே, அவர்களின் மனங்களும் இருதயங்களும் வரவிருக்கும் ராஜ்யத்தின் மகிமைகளைப் பற்றிக்கொண்டிருந்ததால், அதற்கு முன் நிகழவிருந்த கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய சாட்சியத்தை அவர்களும் கவனிக்கத் தவறினர். நம் கர்த்தர் மீண்டும் வந்து அவர்களைத் தம்முடைய மகிமையில் பங்காளிகளாவதற்கு தம்மிடம் அவர்களை ஏற்றுக்கொள்வதாக அவர்களுக்கு உறுதியளித்தார்: **"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்."** (யோவான் 14:3). **"நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்: நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்"** (யோவான் 16:7) என்று அவர் அவர்களிடம் கூறியபோது, அவர்கள் இன்னும் ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாதிருந்தார்கள். இந்த ஜெனிப்பித்தலுக்காக அவர்கள் பெந்தெகொஸ்தே வரை காத்திருந்தார்கள், அவர்கள் ஆவியினால் ஜெனிப்பிக்கப் பட்டிருந்தால் நம் கர்த்தர் தாம் விரும்பியபடி அவர்களுக்கு விளக்கியிருக்க முடியும். ஆவியினால் ஜெனிப்பிக்கப்படாத நிலையில், விவரங்களுக்குள் செல்லாமல், அவர்களை சுபாவ மனிதர்களாகக் கருதி அவர் பேச வேண்டிய கட்டாயம்



**தன் வாயைக் காக்கிறவன் தன் பிராணனைக் காக்கிறான்;
தன் உதடுகளை விரிவாய்த் திறக்கிறவனோ
கலக்கமடைவான்.**

நீதிமொழிகள் 13:3

இருந்தது; இல்லையெனில் அந்த விளக்கங்கள் அவர்களுக்குப் பைத்தியமாகத் தோன்றியிருக்கும். ஆகையால் அவர் விளக்கங்களை மேலும் வெளிப்படுத்துவதை விடுத்து, பரிசுத்த ஆவி, தேற்றரவாளன் வரும்போது, தேற்றரவாளன் மூலம் அவர் முன்பு கூறிய எல்லாவற்றையும் அவர்களுக்கு நினைவுக்கு கொண்டுவருவதாக அவர்களுக்கு உறுதியளித்ததோடு, அப்போது அவர்கள் தெய்வீகத் திட்டத்தின் ஆழமான விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும் என்பதையும் குறிப்பிட்டார். அவர் மீண்டும் இவ்வாறு கூறினார்: "**இன்னும் அநேகங்காரியங்களை நான் உங்களுக்குச் சொல்லவேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள்.**" (யோவான் 16:12). பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், யேகோவா தேவனுடைய ரகசியம் காக்கும் தன்மையின் நோக்கத்தை அறிந்துகொள்ள முடிகிறது!

நமது வார்த்தைகள் – நமது குணாம்சத்தின் அட்டவணை

நம்முடைய கர்த்தராகிய இயேசுவைப் பொருத்த மட்டில், அவருடைய இருதயம் பூரணமாயிருந்தது, அவருடைய வாய் தெளிவாகவும், சுத்தமாகவும், சுருக்கமாகவும் பேசியது; அவரிடத்தில் பாவமில்லை, அவருடைய வாயில் வஞ்சனையும் காணப்படவில்லை, "**உம்முடைய உதடுகளில் அருள் பொழிகிறது**" என்றும், "**எல்லாரும் அவருக்கு நற்சாட்சி கொடுத்து, அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகளைக் குறித்து ஆச்சரியப்பட்டார்கள்**" என்றும் கூறப் பட்டுள்ளது (சங்கீதம் 45:2; லூக்கா 4:22). கிறிஸ்துவை அடையாளப்படுத்திய மோசே, கர்த்தருடைய வார்த்தைகளின் ஆசீர்வதிக்கப்பட்ட செயல்விளைவுகளை இவ்வாறு முன்னறிவித்தார், "**மழையானது இளம்பயிரின்மேல் பொழிவது போல, என் உபதேசம் பொழியும்: பனித்துளிகள் புல்லின்மேல் இறங்குவதுபோல, என் வசனம் இறங்கும்**" (உபாகமம் 32:2). இயேசு, "**நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது**" என்று கூறினார். (யோவான் 6:63). கர்த்தருடைய வார்த்தைகள் அவ்வளவு ஞானமும், நீதியும், உண்மையாயும் இருந்தன. எனவே, அவருடைய சத்துருக்கள் ஏதாவது குறை கண்டு பிடிக்கத் தொடர்ந்து முயன்றாலும், "**அவர்கள் அவரை ஜனங்களுக்கு முன்பாகப் பேச்சிலே குற்றம் பிடிக்கக்கூடாமல், அவர் சொன்ன உத்தரவைக் குறித்து ஆச்சரியப்பட்டு, மவுனமாயிருந்தார்கள்**" என்று கூறப்படுகிறது. (லூக்கா 20:26). மற்றவர்கள், "**அந்த மனுஷன் பேசுகிறது போல ஒருவனும் ஒருக்காலும் பேசின தில்லை**" என்று சொன்னார்கள் – யோவான் 7:46.

"**ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்**" அப். பேதுரு மேலும் கூட்டுகிறார். (1 பேதுரு 4:11); அதாவது ஞானமாகவும், கர்த்தருடைய ஆவிக்கும் வார்த்தைக்கும் இசைவாகவும் போதிக்கக்கடவன். மேலும், "**உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபடுவசனிப்புக்கும் [வஞ்சனைக்கும்] விலக்கிக் காத்துக் கொள்.**" "**தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.**" "**ஞானியினுடைய வாய்மொழிகள் தயையுள்ளவைகள்: மூடனுடைய [ஞானமற்று, பொறுப்பற்று பேசுபவர்] உதடுகளோ அவனையே விழுங்கும். அவன் வாய்மொழிகளின் துவக்கம் மதியீனமும், அவன் வாக்கின் முடிவு கொடிய பைத்தியமாம்.**" "**தேவசமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு: தேவன் வானத்திலிருக்கிறார்: நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக.**" – சங்கீதம் 34:13; நீதிமொழிகள் 21:23; பிரசங்கி 10:12, 13; 5:2.

தன்னுடைய எல்லா துன்பங்களுக்கு மத்தியிலும், தனது உதடுகளால் பாவம் செய்யாமல் மிகவும் கவனமாக இருந்த விசுவாச உண்மைத்துவமுள்ளவராகிய யோபுவைப் பற்றி என்ன சொல்லுவோம்? (யோபு 2:10; 31:30; 1:21, 22). கர்த்தர், தனது வார்த்தைகளை தனது இருதயத்தின் அளவு காட்டியாக எடுத்துக்கொள்வார் என்பதை அறிந்திருந்த அவர், தனது இருதயத்தையும் வார்த்தைகளையும் நேர்மையாக வைத்திருப்பதில் இன்னும் கவனமாக இருந்து: "**தேவனிடமிருந்து ஆசீர்வாதத்தைப் பெற்ற நாம் துர்பாக்கியத்தையும் பெறவேண்டாமோ?**" (ரோதர்ஹாம் மொழிபெயர்ப்பு) "**கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்: கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்**" என்று கூறினார். கடுமையான சோதனைகளின் கீழ், அன்பான கீழ்ப்படிதல், பொறுமை மற்றும் விசுவாசத்தின் வார்த்தைகள் அபரிமிதமாக வந்த இருதயத்தில் கலகத்தின் ஆவி சிறிதும் காணப்படவில்லை. சங்கீதம் 39:1-ல் சங்கீதக்காரன் இவ்வாறு கூறுகிறார்: "**என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் [நீதிமான்களைச் சோதித்து பரீட்சிப்பவன்] எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்.**" சங்கீதம் 39:2-3 வசனங்கள் மேலும் தெளிவைக் கொண்டு வருகின்றன; இந்த அன்பற்ற உலகில் நம் எஜமானரின் நிந்தைகளை மட்டுமே நாம் எதிர்பார்க்க முடியும்; ஏனென்றால் வேலைக்காரன் தன் எஜமானருக்கு மேலானவன் அல்ல. உலகம், மாம்சம் மற்றும் பிசாசு நம் வழியை எதிர்க்கின்றன: உள்ளே போராட்டங்களும் வெளியே பயங்களும் உள்ளன, மேலும்



நீதிமான்களை நோக்கிய அம்புகளும், அக்கினியாஸ்திரங்களும் ஏராளம். ஆனால் துன்பங்கள் மற்றும் கடுமையான சோதனைகளின் கீழ் ஆத்துமாவின் பாதுகாப்பான மனநிலை என்ன? பல சிக்கல்களைத் தரும் விஷயங்களைத் தொட நெருங்குவதற்கு முன், முதலாவது அதன் ஒவ்வொரு விஷயத்திலும் அவருடைய வழிநடத்துதலையும், அவருடைய சித்தத்தையும் காண, தேவனுக்கு முன்பாக அமைதியாகக் காத்திருந்து கவனிக்க வேண்டாமா? எனவே, சங்கீதக்காரன் 39:2-ல் இவ்வாறு கூறுகிறார்: **"நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும்** [என் பார்வைக்கு நன்மையானதாகத் தோன்றியதைச் செய்வதிலிருந்து அல்லது சொல்வதிலிருந்தும் கூட] **பேசாமல் அமர்ந்திருந்தேன்: ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது.** வசனம் 3: **என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது: நான் தியானிக்கையில் அக்கினி** [அக்கினி போன்ற சோதனையின் விளக்கம்] **மூண்டது: அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்"**- நிந்திப்பவர்களிடமோ, மற்றவர்களிடமோ அல்ல, ஆனால் கர்த்தரிடம்.

ராஜ்ய வேலையில் பிரதிஷ்டை செய்த எபிஃபெனி பாளயக்காரர்களுக்கென்று தேவன் வைத்திருக்கும் ஊழிய சிலாக்கியத்திற்கு நம்மை ஆயத்தப்படுத்துவதற்காக, தற்போது நமக்கு கடுமையான சோதனைகள் மற்றும் பரீட்சைகள் வழங்கப்படுகின்றன என்ற நிகழ்வு உண்மைகளைக் கருத்தில் கொள்கையில், தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம் நம்முடைய **"ஒவ்வொரு வீணான** [பயனற்ற அல்லது தீங்கு விளைவிக்கும்] **வார்த்தைக்கும்"** கணக்கொப்புவிக்க வேண்டும். (மத்தேயு 12:36). இந்த வகுப்பார் இந்த காலத்தில் முழு நியாயத்தீர்ப்பின் கீழ் இல்லை என்றாலும், யேகோவா தேவனுடைய சத்திய வார்த்தையின் மாணாக்கர்களாகவும், வார்த்தையை அறிவிப்பவர்களாகவும் இருப்பதால், நமது விசேஷித்த சோதனைகள் நமது எதிர்காலத்திற்கு எவ்வளவு முக்கியமானவை என்று ஜாண்சன் போதகர் எழுதுகிறார். தங்கள் பாவங்களால், குறிப்பாக தேவனுடைய சத்தியத்திற்கு விரோதமாக, தங்கள் குணாதிசயங்களை மிகவும் சீர்குலைத்துக்கொண்ட சிலருடைய விஷயங்களில், இதன் விளைவாக, சில சந்தர்ப்பங்களில் ஆயிரம் வருட யுக ஏற்பாடுகளாலும் அவர்களை சீர்திருத்துவது சாத்தியமற்றதாகும். கர்த்தர் நமது எல்லா வார்த்தைகளையும் நம் இருதயங்களின் அட்டவணையாக எடுத்துக்கொள்கிறார். நமது வார்த்தைகள் கலகமூட்டுகிறதாகவோ, அல்லது நேர்மையற்றதாகவோ, அல்லது அற்பமானதாகவோ, அல்லது அலட்சியமானதாகவோ, அல்லது அன்பற்றதாகவோ, அல்லது நன்றியற்றதாகவோ, அல்லது பரிசுத்தமற்றதாகவோ, அல்லது அசுத்தமானதாகவோ இருந்தால், **"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்"** என்ற கோட்பாட்டின் அடிப்படையில் இருதயம் அதற்கேற்ப நியாயந்தீர்க்கப்படுகிறது. நமது அன்றாட வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில், நமது வார்த்தைகள், நமது இருதயங்களின் நிலையைக் குறித்து தேவனுக்கு முன்பாக தொடர்ந்து சாட்சி பகர்கின்றன. எனவே நம் கர்த்தருடைய வார்த்தைகள் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றன: **"தேவ சமுகத்தில் நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாமலும் இரு"** என்ற ஆலோசனை இந்த விஷயத்தில் எவ்வளவு பொருத்தமானதாக உள்ளது [மேலும் நினைவில் கொள்ளுங்கள்; **"சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்"** - எபிரெயர் 4:13]; **ஏனெனில் தேவன்** [நமது நீதிபரர்] **வானத்திலிருக்கிறார்** [சிங்காசனத்தின் மீது], **நீ பூமியிலிருக்கிறாய்** [தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக சோதனையின் கீழ்]; **ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக."** (பிரசங்கி 5:2). அவை தேவனுக்கும், மனிதனுக்கும் முன்பாக சொல்லப்பட்டதாய், சிந்தனைமிக்கதாகவும் ஞானத்துடனும் இருக்கட்டும்.

இந்தப் பொறுப்பை உணரும் அனைவரின் உதடுகளிலும் சங்கீதக்காரன் இந்த ஜெபத்தை வைக்கிறார், **"கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்: என் உதடுகளின் வாசலைக்காத்துக்கொள்ளும். என் இருதயத்தைத் துன்மார்க்கத்திற்கு இணங்கவொட்டாதேயும்." "என் கன்மலையும், என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியானமும், உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக." "உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும்போது, என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும். உமது கற்பனைகளெல்லாம் நீதியுள்ளவைகள்: ஆதலால், என் நாவு உம்முடைய வசனத்தை விவரித்துச்சொல்லும். நான் உம்முடைய கட்டளைகளைத் தெரிந்துகொண்டபடியால், உமது கரம் எனக்குத் துணையாயிருப்பதாக. கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல்** [எல்லா பாவங்களிலிருந்தும், பரிசுத்தத்தின் பரிபூரணத்திற்காகவும், அலங்காரத்திற்காகவும்] **ஆவலாயிருக்கிறேன்: உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி."** (சங்கீதம் 141:3-4; 19:14; 119:171-174).

யேகோவா தேவன் நாம் பரிபூரணமாக இருப்பது சாத்தியமில்லை என்பதை அறிந்து, தம்முடைய கிருபையினால், நாம் அபூரண ஜீவிகள் என்பதைக் கருத்தில் கொள்கிறார்; இருப்பினும், அவர் தம்முடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நம்மிடமிருந்து நமது சிறந்த முயற்சிகளை நியாயமாக எதிர்பார்க்கிறார்; ஆகவே, நமது வார்த்தைகளிலும், வழிகளிலும் அடையவேண்டிய முழுமையான வளர்ச்சி விழிப்புடனும், உண்மைத்துவமுடனும் முயற்சி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். ஆயினும்கூட,

இந்த நியாயத்தீர்ப்பு நாளில் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் கணக்கொப்புவிக்க வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாக நமது வழிகளை அனுதினமும் நாம் சீர்தூக்கிப் பார்க்கும்போது, நமது வார்த்தைகள் ஏதேனும் ஒரு விஷயத்தில் கர்த்தருக்கு அவமதிப்பு செய்திருப்பதைக் கண்டறிந்தால், நாம் "ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" என்பதை நினைவில் கொள்ள வேண்டும் (1 யோவான் 2:1); மேலும், நம்முடைய பரிந்து பேசுகிறவரின் நாமத்தில், நம்முடைய பரம தகப்பனை ஜெபத்தில் அணுகி, பரிசுத்த நடக்கை மற்றும் சம்பாஷணை மூலம் அவருடைய நாமத்தையும் அவருடைய நோக்கத்தையும் கனம் பண்ணத் தவறியதற்காக நமது ஆழ்ந்த துக்கத்தைத் தெரிவித்து, அந்தப் பாவம் நம்மீது சுமத்தப்படாமல், கிறிஸ்துவின் விலை-யேறப்பெற்ற இரத்தத்தில்தான் நம்முடைய முழு விசுவாசமும் நம்பிக்கையும் உள்ளது என்பதைத் தாழ்மையுடன் அறிக்கை யிட்டு அவர் மூலமாக நம்முடைய சுத்திகரிப்புக்காக அவரு-டைய கிருபையின் ஏற்பாட்டினால் அது நீக்கப்படும்படி மனத்தாழ்மையுடன் வேண்டிக் கொள்வோமாக.

ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நாம் கணக் கொப்புவிக்க வேண்டும்; எனினும் நமது மனந்திரும்புதலின் வார்த்தைகளாலும், விசுவாசத்தால் அளிக்கப்பட்ட கிறிஸ்து-வின் புண்ணியங்களினாலும் நாம் விடுவிக்கப்படுவோம். இல்லையெனில், கர்த்தரை அவமதிப்பு செய்த நம் வீணான வார்த்தைகள் நமக்கு எதிராக நின்று நம்மைக் குற்றப் படுத்தும், மேலும் அதன் விளைவுகளை நாம் கட்டாயமாக அனுபவிக்க வேண்டியிருக்கும். அதன் முதல் விளைவு தனக்குத்தானே-தீங்கு செய்வதாகும்; ஏனென்றால் ஒவ்வொரு பொல்லாத சிந்தனையும் அல்லது வார்த்தையும் குணத்தைக் கடினப்படுத்தி, அநீதியின் பக்கம் அதிகமாக இணங்கிப்போகச் செய்யும். அதன் இரண்டாவது விளைவு மற்றவர்களுக்கு ஒரு கெட்ட முன்மாதிரியாவதோடு, அவர்-களில் தீமையையும் தூண்டுகிறது. **"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்: கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும்."** (நீதிமொழிகள் 15:1). நாம் அனுதினமும் தேவனிடம் நம் கணக்குகளை ஒப்புவித்து, அடுத்தடுத்த ஒவ்வொரு நாளிலும் மேன்மேலும் ஜெயங்கொள்ளும் பெலத்திற்காக அவருடைய கிருபையைத் தேடினால், நாம் நியாயத்தீர்ப்பில் குற்றமற்றவர்களாக விடுவிக்கப்பட்டு, கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு முன்பாக அங்கீகரிக்கப்படுவோம்; மேலும் நாம் அவருக்குப் பிரியமானவர்கள் மற்றும் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கவர்கள் என்று அவருடைய பரிசுத்த ஆவியின் சாட்சியத்தை நம்முடைய மனங்களில் பெறுவோம்.

உன் வார்த்தைகளினாலே குற்றமற்றவனாக தீர்க்கப்படுவாய் – உன் வார்த்தைகளினாலே குற்றவாளியாகத் தீர்க்கப்படுவாய்

மத்தேயு 12:34, **"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்"**



என்று கூறுகிறது. மேலும் வசனம் 37, **"உன் வார்த்தை-களினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய்: அல்லது உன் வார்த்தைகளினாலே குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்"** என்று கூறுகிறது. சரியான வார்த்தைகளைத் தொடர்ந்து பயன்-படுத்துவதற்கு சரியான இருதய நிலைமை அவசியம் என்பதையும், ஒருவருக்கு தவறான இருதய நிலைமை இருந்தால், அவன் தீயவற்றையே பேசுவான் என்பதையும் தெளிவாகப் புரிந்துகொள்ள இந்த வார்த்தைகள் நமக்கு உதவுகின்றன. **"நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாத வைகளை எடுத்துக்காட்டுகிறான்."** (மத்தேயு 12:35). இந்த வேதாகம வசனங்களுக்கு இசைவாக நமது முதல் கவனம் இருதயத்தின் மீது இருக்க வேண்டும் – அதன் விருப்பங் களும், மனப்பான்மைகளும் முழுமையாக தெய்வீக கிருபையின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டும்; சத்தியம் மற்றும் நீதியின் ஒவ்வொரு கொள்கையும் அங்கு சிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்யப்பட வேண்டும்; தேவன் மற்றும் கிறிஸ்துவின் மீதான உச்சபட்ச பயபக்தி, நீதி மற்றும் பரிசுத்தத்தின் அனைத்து அலங்காரங்களின் மீதான தீவிரமான அன்பு ஆகியவை ஜீவியத்தின் ஆளும் கொள்கைகளாக உறுதியோடு நிலைநிறுத்தப்பட வேண்டும். ஒரு மனிதனின் **"இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்."** (நீதிமொழிகள் 23:7).

நாவு மிகவும் பயனுள்ள உறுப்புகளில் ஒன்றாக இருந்தாலும், அதன் மீது ஒரு கடிவாளம், ஒரு கட்டுப்பாடு, ஒரு கட்டுப்படுத்தும் செல்வாக்கு ஆகியவற்றை வைப்பது அவசியம். நாவைக் கொண்டு நாம் நம் தேவனை கனம் பண்ணலாம், அல்லது அவரை தூஷிக்கலாம். நமது வசனம் குறிப்பிடுவது போல, துன்மார்க்கரின் முன்னிலையில் இருக்கும் போது, நீதிமான்களுடன் இருப்பதை விட நாம் இன்னும் அதிக எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்; ஏனென்றால் துன்மார்க்கரின் போக்குகளும் எண்ணங் களும் பொல்லாப்புக்கு சார்பாயிருக்கும். துன்மார்க்கரோடு இருக்கும்போது அல்லது அவர்கள் முன்னிலையில் இருக்கும்போது நாம் இழிவுப்படுத்தும் செல்வாக்குடன் தொடர்பில் இருக்கிறோம். இதுபோன்ற சமயங்களில், அனுதாப மனநிலை கொண்ட சிலர் தங்கள் நாவுகளைக் கட்டுப்படுத்துவதில் தனிவகையான சிரமத்தைக் காணலாம்; ஆனால் நீதிமான்களுடன் நாம் சுதந்திரமாகப் பேசுவதைப்

போல துன்மார்க்கரிடம் நல்ல விஷயங்களையுங்கூட பேசுவதை விட அமைதியாக இருப்பதே நல்லது. நம் கர்த்தர், **"பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்: உங்கள் முத்துகளைப் பன்றிகள் முன் போடாதேயுங்கள்: போட்டால் தங்கள் கால்களால் அவைகளை மிதித்து, திரும்பிக்கொண்டு உங்களைப் பீறிப்போடும்"** என்று ஆலோசனை கூறுகிறார். (மத்தேயு 7:6). வேதவாக்கியங்களின் எச்சரிக்கை வெறுமனே நாவிற்கு எதிரானது அல்ல, மாறாக நம் நாவுகளைத் தவறாகப் பயன்படுத்துவதில் மற்றவர்களுக்கு எதிராக நாம் செலுத்தும் அதிகாரத்திற்கு எதிரானது. நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ, சரீரத்தின் வேறு எந்த உறுப்பை விடவும் நாவு அதன் செல்வாக்கில் சக்தி வாய்ந்தது என்ற கூற்றை அனுபவமுள்ள ஒவ்வொரு நபரும் முழுமையாக ஒப்புக்கொள்வார்கள். எலும்பில்லா நாவு எதையும் பேசும் என்ற பழமொழியை மீண்டும் மேற்கோள் காட்டுகிறோம்.

யாக்கோபு 3:9-12-ல் தனது நாவை அடக்கத் தவறும் கிறிஸ்தவர் எந்த அளவுக்கு சன்மார்க்க ரீதியான குழப்பத்திற்கு ஆளாகிறார் என்பதை அப்போஸ்தலர் காட்டுகிறார். மேலும் அதனால் அப்படிப்பட்ட ஒருவர் பரலோக தகப்பனுக்குச் செய்யும் ஆராதனை பரிசுத்தமானதாகவும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் இருக்க முடியும் என்று நம்புவது எவ்வளவு வீண் என்பதையும் அவர் காட்டுகிறார். **"இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது."** (மத்தேயு 6:24). தேவனைப் போற்றுகிற (கனம் பண்ணுகிற, துதிக்கிற) அதே நபர், **"தேவனுடைய சாயலின்படி** [சொல்லர்த்தமாக; இருந்ததால்] **உண்டாக்கப்பட்ட மனுஷரை"** சபிக்கவும் செய்கிறவர்கள் (தீங்குசெய்தல், அவதூறு செய்தல், அவமானப்படுத்துதல்) (வசனம் 9) தீர்மானமற்ற நிலையில் தொடர்ந்து நடுநிலை வகிக்க முடியாது. இதற்கும் அப்பாற்பட்ட ஒரு உண்மையானதும் ஒரு சன்மார்க்க ரீதியானதுமான முரண்பாடு இருப்பதை அப்போஸ்தலன் யாக்கோபு நமக்குக் காட்டுகிறார்: **"துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது."** (வசனம் 10). **"என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது"** என்று அவர் உள்ளன்புள்ள அக்கறையுடன் இன்னும் கூறுகிறார், ஆனால் நாம் அதை எவ்வளவு அடிக்கடி காண்கிறோம்!

தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம், பொல்லாப்பிற்கான நாவின் அதீத வல்லமையை முழுமையாகப் புரிந்துகொள்வோமாக; இல்லையெனில் நாம் தவறாகப் பேசிவிடுவோமோ என்ற அச்சத்தில், ஒரு வார்த்தை பேசுவதற்கே நம்மைத் தயங்கும்படி அது செய்துவிடும். தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த ஜனங்களாக, அவரைப் போற்றுவதிலும், அவருடைய கிருபை, இரக்கம் மற்றும் அன்பை அறிக்கையிடுவதிலும், அவருடைய வார்த்தையின் விலையேறப்பெற்ற சத்தியத்திற்கு சாட்சி கொடுப்பதிலும் நம் நாவுகளை நாம் பயன்படுத்துகிறோம். இதுவே தகுதியானது. தேவனைப் புகழ்ந்து பேசும் இதே வாயிலிருந்து சகோதரர்களுக்கு – அல்லது யாருக்கும் – தீங்கு விளைவிக்கும் எதுவும் வரக்கூடாது என்ற இந்த சிறந்த பாடத்தை கிறிஸ்துவின்



பாடசாலையில் கற்றுக்கொள்வதை நாம் உறுதி செய்ய வேண்டும். ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும், கசப்புமான தண்ணீர் சுரக்கும் நீரூற்றைப் பற்றி யாராவது எப்போதாவது அறிந்திருக்கிறீர்களா (வசனம் 11)? இல்லை! ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும், கசப்புமான தண்ணீர் சுரக்க முடியாதது போல, அத்தகைய மனநிலை நம்மிடம் இருக்கும் வரை நம்மாலும் தேவனுடைய நேசகுமாரனின் நகல்களாகவோ அல்லது ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்களாகவோ இருக்க முடியாது.

வார்த்தைகள்

நாம் முதலில் கருத்தில் கொள்ள வேண்டிய வார்த்தை "திட்ட-வரைபடம்" ("blueprint") ஆகும். யேகோவா தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையான வேதாகமமானது, யுகங்களைப் பற்றிய ஏற்பாடாகும், இது 6,000 வருடங்களுக்கும் மேலாக மனுக்குலம் செல்ல வேண்டிய வழியில் அவர்களை வழிநடத்தி வருகிறது. இதில், மனுக்குலம் அனைத்திற்குமான தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தின் "திட்ட-வரைபடத்தினை" வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த சி.டி.ரஸல் போதகரின் பணி நினைவுக்கு வருகிறது, இது இன்னும் பல நுணுக்கமான வேதாகம உள்ளார்ந்த புரிதல்களுக்கு வழிவகுத்தது. ஒரு திட்ட-வரைபடம் என்பது வடிவமைக்கப்பட்ட திட்டம், அல்லது தொழில்நுட்ப வரைபடம் என்று விவரிக்கப்படுகிறது.

தேவனுடைய வார்த்தை (வேதாகமம்) மனித சமுதாயத்தில் ஒரு இக்கட்டு காலத்தையும், இன்றைய நாளிலும் கூட அதிகரிக்கும் தேவனற்ற நிலையை குறித்தும் நமக்கு உறுதியளித்துள்ளது. பல்வேறு தகவல் தொடர்பு வழிமுறைகளின் செய்தி ஒட்டுமொத்தமாக மேலும் மேலும் சீர்கேடடைந்துவிட்டது; நீதியான மற்றும் தெய்வீக கோட்பாடுகளின்படி வாழ முயலும் வாலிபர்கள் (அத்துடன் மற்றவர்களும்) எதிர்கொள்ளும் சூழ்நிலைகள் மிகவும் கடினமாகிவிட்டன; மேலும் இந்தக் கோட்பாடுகளை கிட்டத்தட்ட கைவிட்டு, இந்த உலகின் சீர்கெட்ட நடத்தை கருத்துக்களின்படி கிட்டத்தட்ட வாழ்வதற்கான சோதனைகள் வலுவடைகின்றன. நவீன சமூகத்தில், அனைத்து பள்ளி

அமைப்புகளிலும், குறிப்பாகக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் பரிணாமம், மனிதாபிமானம், நாத்திகம், LGBTQ [இது லெஸ்பியன், ஓரின சேர்க்கை யாளர், இருபாலின ஈர்ப்பு, மாற்று பாலினத்தவர் பால் புதுமையினர் (அல்லது கேள்விக்குரியோர்) ஆகியோரைக் குறிக்கிறது. இது, எதிர்பாலின ஈர்ப்பு மற்றும் பாலின அடையாளம் பற்றிய சமூகத்தின் பொதுவான நெறிமுறை-களிலிருந்து மாறுபட்ட பாலின நாட்டம் மற்றும்/அல்லது பாலின அடையாளத்தை உடைய ஒரு பன்முகத்தன்மை கொண்ட ஜனக்கூட்டத்தை குறிக்கும் ஒரு சுருக்கப் பெயர் ஆகும்] ஆகியவற்றுக்கு சாதகமான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாலும், தேவன், வேதாகமம் மற்றும் அதன் கோட்பாடுகள் மீது அதிக எதிரிடையான முக்கியத்துவம் கொடுக்கப்படுவதாலும், மேலும் இதில் சன்மார்க்கத்தின் தரநிலைகள், "புதிய சன்மார்க்கநெறியினால்," பெரு-மளவில் குறைக்கப்பட்டுள்ளதாலும், இளைஞர்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள், சோதனைகள் மற்றும் பெரும் அழுத்தங்கள் குறித்து நாங்கள் ஆழ்ந்த அனுதாபம் கொள்கிறோம்.

இன்றைய பிள்ளைகள் வேகமான வாழ்க்கை முறையில் பிறக்கிறார்கள், மிக இளம் வயதிலேயே அவர்களின் கைகளில் ஏராளமான மின்னணு சாதனங்கள் கொடுக்கப்படுகின்றன, அவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது ஸ்மார்ட் போன். நடக்கும்போதும், பலருக்கு வாகனம் ஓட்டும்போதும் தொலைபேசி உதவியைக் கையில் வைத்திருக்க வேண்டிய அவசியத்தின் இந்த தொலைபேசி நிகழ்வு, சிறு பிள்ளைகளால் சாதாரணமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில் அவர்களின் இளமைப் பருவம் முளைக்க தொடங்கும் பதின்மவயதில் (அல்லது அதற்கும் முன்பே) சுயாதீனமான அடையாளத்தையும் வெளிப் பாட்டையும் கண்டுபிடிக்கப் போராடுகிறார்கள். பெற்றோர் மற்றும் பிற அதிகாரத்திற்கு எதிராகவும், நிறுவப்பட்ட சன்மார்க்க நெறிமுறைகள், கட்டளைகள் மற்றும் மத ரீதியான மதிப்பீடுகளுக்கு எதிராகவும் கிளர்ச்சி செய்ய வேண்டும் என்ற கடுமையான அழுத்தம் இளைஞர்கள் மீது குறிப்பாக சகாக்களாகக் கருதுபவர்களிடமிருந்து எதிர் கொள்கிறார்கள். தவறானவை மற்றும் விரும்பத்தகாதவை என்று அவர்களுக்குச் சொல்லப்பட்ட பல விஷயங்கள், அவர்களைச் சுற்றியுள்ள வயது வந்தவர்களின் கலாச்சாரம் மிகவும் விரும்பத்தக்கதாகக் காட்டுகிறது; மேலும் இது அவர்களில் பலருக்கு தங்கள் சகாக்களால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, அவர்களில் பலருக்கு இதுபோன்ற விஷயங்களில் ஈடுபடுதலின் ஆர்வத்தைத் தூண்டுகிறது.

இளைஞர்களின் பொழுதுபோக்கிற்காக உருவாக்கப் பட்ட உலகப்பிரகாரமான இசை, அவர்களைப் பெரிதும் பாதிக்கிறது, அதின் பாடல் வரிகள், பெரும்பாலும் அதனுடன் வரும் "வீடியோக்கள்" குறுங்காட்சிகள் ஆகிய இவை இரண்டும் தேவன், பெற்றோர் மற்றும் பிற அதிகாரங்களுக்கு எதிரான கிளர்ச்சி மற்றும் எதிர்ப்பின் மனப்பான்மைகளை பெரும்பாலும் ஊக்குவிப்பதோடு எல்லா வகையான கட்டுப்பாடற்ற தன்மையையும் ஊக்குவிக்கின்றன. பல பாடல்கள் வெளிப்படையாகவே பாலியல் ரீதியானவை, அவை முறையற்ற பாலியல் நடத்தை, காமவெறி, காமவிகாரம், அடிமைத்தனம், வன்முறை மற்றும் ஓரினச்சேர்க்கை ஆகியவற்றையுங் கூட ஊக்குவிக்கின்றன; மற்ற பாடல்கள் மற்றும் "வீடியோக்கள்" வன்முறை, மாந்திரீகம், பேய்த்தனம் நிறைந்தவைகளாய், சாத்தான் வழிபாட்டை ஊக்குவிப்பதையும், தேவன், கிறிஸ்து மற்றும் ஆவிக்குரியவை ஆகியவற்றின் மதிப்புகளை அவமதித்தல் அல்லது குறைந்தபட்சம் விநோதமாகவும் கோரமான சரீரமும் கொண்ட மத ரீதியான உருவங்களை முன்வைத்தல் போன்றவற்றை ஊக்குவிக்கின்றன. உண்மையில், இன்று நாம் வாழும் காலம், வலையமைப்பு தொலைக்காட்சிகளில், நமது பிரதிஷ்டை செய்யப்பட்ட நேரத்திற்கு உரிய மதிப்புடைய ஒரு நிகழ்ச்சியை தேடித் தேர்ந்தெடுக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கெட்ட வார்த்தை என்பது தெய்வ நிந்தனையான அல்லது கீழ்த்தரமான வார்த்தைகள் என்றும் அழைக்கப் படுகிறது, இது பெரும்பாலும் ஆபாசமாகவும் பயபக்தி-யற்றதாகவும் இருப்பதால் அருவருப்பான வார்த்தையாகக் கருதப்படுகிறது. இதில் சாப வார்த்தைகள், இழிவுச் சொற்கள் மற்றும் அநாகரிகமாகக் கருதப்படும் பிற வார்த்தைகளும் அடங்கும். கெட்ட வார்த்தைகள் பொதுவாக அதன் உள்ளடக்-கம் காரணமாக அருவருப்பானதாகக் கருதப்படுகிறது, ஏனெனில் இது பாலியல் ரீதியாக வெளிப்படையானதாகவும், அதனால் அவமரியாதை செய்வதாகவும் உள்ளது. தெய்வ நிந்தனையான வார்த்தைகளைப் பேசுவது, பொதுவாக மரியாதையான உரையாடலை மேற்கொள்ள இயலாததின் விளைவாகும். ஒரு காலத்தில் ஜனங்கள் எட்டிப் பிடிக்க வேண்டிய உயரத்தில் வைக்கப்பட்டிருந்த நீதியின் தரம், இப்போது உலகத்தார்கள் அதன் மீது இடறும் அளவிற்கு தாழ்த்தப்பட்டிருந்தாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதைக் கண்டு, தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளையின் கண்களில் கண்ணீர் வருகிறது.

நீதிமான்கள்

1 பேதுரு 4:18 இவ்வாறு கூறுகிறது: **"நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதானால், பக்தியில்லாதவனும் பாவியும் எங்கே நிற்பான்?"** நமது வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நீதிமான்கள் யார்? என்ற கேள்வியை இது எழுப்புகிறது. அப்போஸ்தலர் எந்த வகுப்பு ஜனங்களையும் குறிப்பிட வில்லை, ஆனால் இவைகளைச் செய்கிற மனுஷன் இவைகளால் பிழைப்பான் என்று அறிவிக்கும் தெய்வீக பிரமாணத்தின் ஒரு கோட்பாட்டை மட்டுமே பொதுவாகக் குறிப்பிடுகிறார் என்று நாங்கள் பதிலளிக்கிறோம்; வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், அப்போஸ்தலர் தேவனுடைய ஏற்பாடுகளைப் பற்றி கூறுகிறார். தேவன் நீதிமான்களுக்கு மட்டுமே நித்திய ஜீவனை வாக்கு

பண்ணியிருக்கிறார். அப்போஸ்தலன் இங்கே எந்த வகுப்பு ஜனங்களையும் குறிப்பிடவில்லை, மாறாக தெய்வீக கோட்பாட்டையே குறிப்பிடுகிறார். (HE'46, பக்கம் 25).

நீதி என்ற வார்த்தையின் அர்த்தத்தையும், நோக்கத்தையும் ஆராய்வோம். அதனை தேவனுக்குப் பயன்படுத்தப்படும்போது, அது அவருடைய தன்மையின் பரிபூரணம் அல்லது பரிசுத்தம், நற்குணம், உண்மைத்துவம் முதலியவையாக இருக்கிறது. அவ்வார்த்தையை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைக்குப் பயன்படுத்தப்படும்போது, அது இருதயத்தின் தூய்மை மற்றும் சன்மார்க்க ஜீவியத்தையும்; தெய்வீக பிரமாணத்திற்கு இருதயம் மற்றும் ஜீவியத்தின் இணக்கத்தையும் அர்த்தப்படுத்துகிறது; இது பரிசுத்தத்திற்கு கிட்டத்தட்ட சமமானது, இதில் பரிசுத்த கோட்பாடுகள், இருதயத்தின் பற்றுதல்கள் மற்றும் தெய்வீக பிரமாணத்துடன் ஜீவியத்தின் இணக்கமும் அடங்கும். இது நீதி, நேர்மை மற்றும் நற்குணம் என்று நாம் அழைக்கும் அனைத்தையும் பரிசுத்த பற்றுகளுடன் உள்ளடக்கியது ஆகும்; சுருங்கச் சொல்லின், இதுவே உண்மையான மதமாகும்.

உதாரணமாக: நூறு என்பது நீதியின் தரத்தைக் குறிப்பிடுவதாக நாம் எடுத்துக் கொண்டால், யாராலும் நூற்று ஒன்று தரப்புள்ளிகள் பெறுவது சாத்தியமில்லை; ஏனென்றால் அவர் நீதியைவிட மேலானவராக இருக்க முடியாது. மேலும், அவர் நூறு என்ற இலக்கை எட்டுவதற்குத் தேவையான தகுதி எதிலும் குறைபாடு கொண்டவராக இருந்தால், அவர் நீதிமானாக இருக்க மாட்டார். நூறு என்பதைத் தரநிலையாகக் கொண்டதால், தொண்ணூற்று ஒன்பது தரப்புள்ளிகள் நீதிக்குரிய குணாம்சத்தைக் கொண்ட மனிதனும் அநீதியான மனிதனாகத்தான் இருப்பான்; மேலும், தெய்வீக பிரமாணத்தின்படி, அவனும் நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது. தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாகிய நாம் எரேமியா 15:16-ம் வசனத்திற்கு இசைவாக வார்த்தைகளை உட்கொண்டு, பேசுவோம், **"உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்: உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும், என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது: சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது."** தேவனுடைய வார்த்தை மிகவும் பரிசுத்தமானது, ஆகையால் அவர் இவ்வாறு கூற முடியும்: **"அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச்செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்"** (ஏசாயா 55:11). **"மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."** (கலாத்தியர் 6:7).

மத்தேயு 12:36-ல், **"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள்** [பயனற்ற அல்லது தீங்கு விளைவிக்கும்]**யாவையும் குறித்து நியாயத்தீர்ப்பு நாளிலே"** கணக்கொப்புவிக்க வேண்டும் என்று நம் கர்த்தர் நம்மை எச்சரித்தார். தற்காலம் நமது நியாயத்தீர்ப்பு நாள் (ஏனெனில் **"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது"** 1 பேதுரு 4:17) என்ற உண்மையிலிருந்து, நம் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது என்பதைக் காணலாம்; மேலும் நமது வார்த்தைகளையெல்லாம் கர்த்தர் நமது இருதயங்களின் அட்டவணையாக எடுத்துக்கொள்-கிறார். நமது வார்த்தைகள் கலகமூட்டுகிறதாகவோ, நேர்மையற்றதாகவோ, அற்பமானதாகவோ, அலட்சியமான-தாகவோ, அன்பற்றதாகவோ, நன்றியற்றதாகவோ, பரிசுத்தமற்றதாகவோ அல்லது அசுத்தமானதாகவோ இருந்தால்; **"இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்"** என்ற கோட்பாட்டின்படி இருதயம் அதற்கேற்ப நியாயந்தீர்க்கப் படுகிறது. (மத்தேயு 12:34). இவ்வாறு நமது அன்றாட வாழ்க்கையின் பல்வேறு சூழ்நிலைகளில், நமது வார்த்தை-கள், நமது இருதயங்களின் நிலையைக் குறித்து தேவனுக்கு முன்பாக தொடர்ந்து சாட்சி பகர்கின்றன. எனவே நம் கர்த்தருடைய வார்த்தைகள் இதைத்தான் சுட்டிக் காட்டுகின்றன: இந்தக் கண்ணோட்டத்தில், பிரசங்கி 5:2-ல் உள்ள பின்வரும் ஆலோசனை காலத்திற்கு எவ்வளவு ஏற்றதாக உள்ளது, **"தேவசமுகத்தில்** [மேலும் நினைவில் கொள்ளுங்கள்; 'சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்'- எபிரெயர் 4:13] **நீ துணிகரமாய் உன் வாயினால் பேசாமலும், மனம்பதறி ஒரு வார்த்தையையும் சொல்லாமலும் இரு: ஏனெனில் தேவன்** [நம் நீதிபரர்] **வானத்திலிருக்கிறார்** [சிங்காசனத்தின் மீது], **நீ பூமியிலிருக்கிறாய்** [தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக சோதனையின் கீழ்]; **ஆதலால் உன் வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக."** (பிரசங்கி 5:2). அவை தேவனுக்கும் மனிதனுக்கும் முன்பாகக் கூறப்பட்டதாய், சிந்தனை மிக்கதாகவும் ஞானத்துடனும் இருக்கட்டும்.

கிறிஸ்து இயேசு அவதூறான வார்த்தைகளையோ அல்லது இழிவான வார்த்தைகளையோ பயன்படுத்தியதாக நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது; யோவான் 7:46 நமக்குத் தெரிவிக்கிறது, **"அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்."** ஜனங்களில் தங்கள் வார்த்தை, பேச்சு முறை மற்றும் பொதுவான நடத்தை ஆகியவற்றில் நாகரீகமாக இருப்பவர்கள், மற்றவர்கள் மீது அதிக செல்வாக்கைக்

"எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்" (1 பேதுரு 4:7).

நினைவில் கொள்ளுங்கள்!

"நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவங்குகிறது" (1 பேதுரு 4:17).

கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிக மரியாதையைப் பெறுகிறார்கள், மேலும் அவர்கள் சொல்வதை அதிக கவனத்துடன் செவிமடுக்கிறார்கள். கிறிஸ்துவுக்காக, தேவனுடைய ஸ்தானாபதிகளாக நமது செல்வாக்கை அதிகரிக்க விரும்பினால், தேவனுக்கும் அவருடைய ஊழியத்திற்கும் நாம் அர்ப்பணித்த நமது மனுஷீக ஜீவியம் அனைத்தையும் விசுவாச உண்மைத்துவத்துடன் பயன் படுத்த விரும்பினால், அவருடைய நாமத்திற்கு கனத்தையும் மகிமையையும் மட்டுமே கொண்டுவர விரும்பினால், நாம் நமது வார்த்தைகளை கவனமாகத் தேர்ந்தெடுப்போமாக. மேலும் அவதூறான வார்த்தை, ஆட்சேபனைக்குரிய உணர்ச்சி வெளிப்பாடுகள் அல்லது கெட்ட வார்த்தை போன்றவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் நமது உத்தியோகத்தை தரம் தாழ்த்தி நமது செல்வாக்கைக் கெடுத்துக்கொள்ளாதிருப்போமாக.

"ஜீவ விருட்சம்" என்ற சொற்றொடர் நமது எழுத்துக் களில் பல முறை பயன்படுத்தப்பட்டுள்ளது; மேலும் அதை ஒரு நாவாக உருவகப்படுத்தலாம்: "ஆரோக்கியமுள்ள நாவு ஜீவவிருட்சம்; நாவின் மாறுபாடோ ஆவியை நொறுக்கும்" (நீதிமொழிகள் 15:4 NIV). ஆம், நாவிலிருந்து சரளமாக வரும் வார்த்தைகள் நன்மைக்கோ அல்லது தீமைக்கோ பயன்படுத்தப்படலாம். நாம் பயனுள்ள கிறிஸ்தவர்களாக இருக்க விரும்பினால், எப்படி, என்ன பேசுகிறோம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும். கிறிஸ்தவனின் பேச்சு எப்போதும் **"உப்பால் சாரமேறினதாய்"** அதாவது பரிசுத்த எண்ணங்களை ஆக்கப்பூர்வமானதாகவும், பாதுகாக்கும் வகையிலும் இருக்க வேண்டும். (கொலோசெயர் 4:6).

நாம் பயன்படுத்தும் வார்த்தைகளும் அவற்றைப் பேசும் விதமும் பெரும் நன்மைகளைத் தரலாம் அல்லது அதிக தீங்கை ஏற்படுத்தலாம். ஒரே வாயிலிருந்து அவமதிப்புகள் அல்லது பாராட்டுகள், உண்மைகள் அல்லது உண்மை-யற்றவைகள் வரலாம். நிச்சயமாக, பேச்சு உறுப்பாகிய – நாவின் – மேல் குற்றம் இல்லை. ஏனென்றால் அது மனதின் ஒரு கருவி மட்டுமே. மனதில் பதிந்திருப்பதுதான் வார்த்தைகளில் வெளிப்படுகிறது. நமது நவீன உலகில் அழகான பேச்சு அரிதாகவே கேட்கப்படுகிறது. நாம் அடிக்கடி கேட்பது சபிக்கும் அல்லது நிந்திக்கும் வார்த்தைகளே; அவற்றில் பெரும்பாலானவை கோபத்தின் வெளிப்பாடாக இருக்கிறது, பல சமயங்களில் அது சொல்வள குறைபாட்டின் அறிகுறியாகும். படித்தவர்கள் சபிக்கமாட்டார்கள் என்பதல்ல, இங்கு கல்வி முக்கியமல்ல, ஆனால் குணம் தான் முக்கியம். உன்னதமான எண்ணம் மனதை உயர்த்தவும், மேம்படுத்தவும், ஊக்குவிக்கவும், மேலும் அதே வேளையில் அறிவூட்டவும் முயற்சிக்கிறது. இருப்பி-னும், இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலும் இதற்கு மாறான போக்கே நிலவுகிறது. அரசியலில் எதிரிகளைத் தரக்குறைவாகப் பேசும் வானொலி மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் நாம் ஆவேசமான அரசியல் சொற்பொழிவுக்கு ஆளாக்கப்படுகிறோம். வார்த்தைகள்



வெற்றியை அல்லது தோல்வியை தீர்மானிக்கிறது. அதிகப் பேச்சு கவனக்குறைவுக்கு வழிவகுப்பதால், "குரலை" உயர்த்த வேண்டிய தேவை ஏற்படுகிறது. எனவே, போட்டியில் தனித்து நிற்கும் முயற்சியில், ஆவேசமான பேச்சு (மற்றும் நடத்தை) கொண்ட உதாரணங்கள் மேலும் மேலும் நம் மீது திணிக்கப்படுகின்றன.

ஆகஸ்ட் 1-ம் தேதிக்கான நமது அனுதின பரலோக மன்னா மற்றும் பக்தியான ஆராதனையில், விவாதிக்கப்பட்ட வேதாகம வசனம் நீதிமொழிகள் 18:21-ல் கொடுக்கப் பட்டுள்ள சாலொமோன் ராஜாவின் வார்த்தைகள் ஆகும், **"மரணமும் ஜீவனும், நாவின் அதிகாரத்திலிருக்கும்: அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்:"** மேலும் புதிய ஏற்பாட்டில், நாவின் வல்லமையை அனுபவத்திலிருந்து அப். யாக்கோபு பேசுகிறார்: **"நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்."** (யாக்கோபு 3:6). நம்முடைய கர்த்தராகிய இயேசு இந்தக் கூற்றைக் கூறினார்: **"வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது: வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்."** (மத்தேயு 15:11). எல்லாக் காவலோடும் நமது மனதைக் காத்துக் கொள்ள வேண்டும். நாம் மனதில் பாதுகாக்கும் எண்ணங்கள் எப்போதாவது நமது வாயின் வழியாக வெளிப்படும் என்பதையும், அதுவும் பெரும்பாலும் மிகவும் சங்கடமான தருணங்களில் வெளிப்படும் என்பதையும் நாம் உணர வேண்டும். நாம் சொல்லும் வார்த்தைகளின் அடிப்படையில் நமது குணாம்சமும் ஆளுமையும் தீர்மானிக்கப்படும்.

உலகின் துன்மார்க்கரும், தூஷிக்கிறவர்களும் மற்றவர்களுடன் பேசும் போது நல்ல மற்றும் இனிமையான நடத்தையில் குறைவுபடுவதால், இனிமேல் தேவ பயமுள்ள சொற்களஞ்சியத்தை பயன்படுத்த முடியாது! சமூக ஏற்றுக்கொள்ளலில் மாற்றம், ஊடகங்கள் மூலம் தகாத வார்த்தைகளின் பயன்பாடு அதிகரித்தல் மற்றும் மொழி பயன்பாட்டில் முறையான கட்டுப்பாடுகளில் சாத்தியமான சரிவு, உள்ளிட்ட பல காரணிகளால் நிந்திப்பது அல்லது அவதூறான அல்லது அருவருப்பான வார்த்தையைப் பயன்படுத்துவது மிகவும் பொதுவானதாகிவிட்டது. கூடுத-லாக, குறிப்பாக மன அழுத்தம் அல்லது விரக்தி மிக அதிகமாக இருக்கும் சூழ்நிலைகளில் நிந்திப்பது உணர்ச்சி-களை வெளிப்படுத்தும் ஒரு வழி என்று சிலர் வாதிடுகின்றனர்.

மத்தேயு 24:45-லுள்ள வார்த்தைகளைப் பற்றிய குறிப்புகளுடன் நாம் முடிக்கிறோம், **"ஏற்றவேளையிலே தன் வேலைக்காரருக்குப் போஜனங்கொடுத்து அவர்களை விசாரிக்கும்படி எஜமான் வைத்த உண்மையும் விவேகமுமுள்ள ஊழியக்காரன் யாவன்?"** இந்த வார்த்தைகளில், கர்த்தர் தமது இரண்டாவது வருகையின் போது, **"புதியவைகளையும் பழையவைகளையும்"** தன் பொக்கிஷத்திலிருந்து வெளியே கொண்டு வருவார் என்றும், ஒரு சிறந்த தொடர்பாளரை அவர் தேர்ந்தெடுத்து அந்த ஆசீர்வாதங்களை விசுவாச வீட்டாருக்குக் கொண்டு வருவார் என்றும் வாக்கு பண்ணினார்; எங்கள் ஆழமான ஆய்வுகள், இந்த தனிநபர் போதகர் சார்லஸ் டி. ரஸல் அவர்களே என்பதை தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைக்கு தெரிவிக்கின்றன; அவர் "காலத்துக்கு ஏற்ற போஜனம்" மற்றும் அடிப்படைக் கோட்பாடுகளைக் [ஏற்பாடுகளை] கொண்டு வந்தார். ஆம், விசுவாச வீட்டாரின் ஆசீர்வாதத்திற்காக, ஏற்ற வேளை வரும் போது, அதிக சத்தியம் வெளிப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

யேகோவா தேவன் வேறு வழிகளிலும் நம்மிடம் பேசுகிறார். உதாரணமாக, நமது டி. என். ஏ உயிரின் வரைபடத்தைக் கண்டுபிடித்ததற்கான பெருமை பொதுவாக ஆங்கில விஞ்ஞானி பிரான்சிஸ் கிரிக் மற்றும் அவரது சக அமெரிக்க விஞ்ஞானியான ஜேம்ஸ் வாட்சன் ஆகியோருக்கு உரியது. ஆனால் அதன் முந்தைய கண்டுபிடிப்பாளர் 1868-ல் அமெரிக்க விஞ்ஞானி எஃப். மிஷர் ஆவார். ஒரு நூற்றாண்டு கடந்த பின்பு, வாட்சன் மற்றும் கிரிக்கின் இரட்டை சுருள் மாதிரி உருவாக்கப்பட்டதன் முக்கியத்துவம் உண்மையிலேயே பாராட்டப்பட்டது. இந்த தற்செயலான கண்டுபிடிப்பு உயிரியல் பாடப்புத்தகங்கள் அனைத்தையும் மீண்டும் எழுத வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியது; திடீரென்று அறிவியல் உலகின் சொற்களஞ்சியத்தில் ஒரு புதிய சொற்களின் தொகுப்பு நுழைந்தது. சிருஷ்டிப்பில் உள்ள மிகச்சிறிய அலகுகளை மனிதர்கள் உற்று நோக்க அனுமதிக்கும் ஒரு தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் இது கைகோர்த்து வந்தது, அதாவது ஒரு திட்ட வரைபடம். உயிர் முறையின் செயல்பாட்டில் டி.என்.ஏ-வின் பங்கை உணர்ந்தது, பல விஞ்ஞானிகளின் நாத்திக தத்துவங்களை கேள்வி கேட்க வழிவகுத்தது; ஏனென்றால், ஒரு வடிவமைப்பாளர் ஒன்றை வரையாமல் ஒரு திட்ட வரைபடத்தைப் பற்றி எவரேனும் கேள்விப்பட்டிருக்கிறார்களா? இந்த கண்டுபிடிப்பு பல அற்புதமான கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்தது. இதில், யுகங்களைப் பற்றிய தெய்வீக ஏற்பாட்டின் "திட்ட வரைபடத்தை" மனுக்குலம் முழுவதையும் புரிந்துகொள்ள செய்ததில் போதகர் சார்லஸ் டி.ரஸலின் பணி நினைவுக்கு வருகிறது, இது மேலும் பல சிறந்த வேதாகம புரிதல்களுக்கு வழிவகுத்தது.

தேவனுக்கென்று பிரதிஷ்டை செய்த பிள்ளைகளாக, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள தேவனுடைய சத்திய வார்த்தைகளுக்கு நாம் எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களாக இருப்போமாக! மேலும், அந்த ஊழியக்காரரான போதகர் ரஸல் அவர்களுக்கு அவருடைய யுகங்களைப் பற்றிய திட்டத்தின் அற்புதமான கட்டமைப்பையும் புரிதலையும் தந்து ஆசீர்வதித்ததற்காக நாம் எப்போதும் நன்றியறிதலுள்ளவர்களாக இருந்து தேவனுக்கு துதி செலுத்துவோமாக. ***

நல்ல சமாரியன்

The Good Samaritan

லூக்கா 10:30 –37

"பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகினான்" (வசனம் 33).

சமாரியாவில் வசித்து வந்த சமாரியர்கள், யூதர்களுடன் எந்த தொடர்பும் கொண்டிருக்கவில்லை. ராஜ்யத்தின் 10 கோத்திர இஸ்ரயேலர்கள் சிறைபிடிக்கப் பட்ட பிறகு அசீரிய ராஜாவால் அங்கு குடியேற்றப்பட்ட அவர்கள், ஒரு சில விசுவாச துரோகிகளான யூதர்கள் [தன்னுடைய மதத்தை விட்டு வெளியேறியவர்கள்] மற்றும் பல புறஜாதியினரின் கலவையாக இருந்தனர். (2 ராஜாக்கள் 17:24 - 41). தேவன் அவர்களை புறஜாதியினராகக் கருதினார் என்று தெரிகிறது; **"இயேசுவும் தாமே சாட்சியளித்துள்ளார்."** (யோவான் 4:22). எழுபது வருட பாழ்க்கடிப்பின் காலத்திலும் (கி.மு. 607-கி.மு. 537) அவர்கள் அந்த தேசத்தில் வாழ்ந்தனர்.

இந்த நல்ல சமாரியன் உவமை என்ன கற்பிக்கிறது



என்பதைச் சுருக்கமாகக் கருத்தில் கொள்வோம்: எருசலேமிலிருந்து எரிகோவுக்குச் சென்ற பிரயாணி மனுக்குலத்தைப் குறித்துக் காட்டுகிறான். அவனைக்

காயப்படுத்திக் கொள்ளையடித்தக் கள்ளர்களிடையே அவன் விழுவது, பாவம், தப்பறை, மரணம் மற்றும் கல்லறை போன்ற தீங்கிழைப்பவைகளின் கொடும் பிடியில் மனுக்குலம் விழுவதைக் குறித்துக் காட்டுகிறது. ஆசாரியன் யூத மதத்தைக் குறித்துக் காட்டுகிறான். காயமடைந்த மனிதனுக்கு அவன் உதவாதது யூத மதம் மனுக்குலத்தை சாபத்தின் கீழ் விட்டுவிடுவதைக் குறித்துக் காட்டுகிறது. லேவியன் பெயர்ச்சபை மார்க்கத்தைக் குறித்துக் காட்டுகிறான், இவர்களும் மனுக்குலத்தை உயர்த்தாமல் விட்டுவிட்டனர். சமாரியன் தலை மற்றும் சரீரமாகிய பூரண கிறிஸ்துவைக் குறித்துக் காட்டுகிறான். காயங்களில் அவன் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்தது, மாம்சத்தில் இருந்த கிறிஸ்து சத்தியத்துடனும் சத்திய ஆவியுடனும் விழுந்துபோன மனுக்குலத்திற்கு குறிப்பிட்ட அளவில் உதவுவதில் பூமிக்கு உப்பாக விளங்கிய அவருடைய ஊழியத்தைக் குறிக்கிறது.

சமாரியன், காயமடைந்த மனிதனை சத்திரத்திற்கு அழைத்துச் செல்லுவதென்பது, பூரண கிறிஸ்து மனித இனத்தை ஆயிரம் வருட யுக நிலைமைகளுக்குக் கொண்டுவருவதைக் குறித்துக் காட்டுகிறது. சத்திரத் தானிடம் அவர் பணம் கொடுத்து உதவியது, ஆயிரம் வருட யுகத்தில் மனுக்குலத்தின் விடுதலை மற்றும் பராமரிப்புக்கான தெய்வீக நீதிக்கு மீட்கும்பலியின் புண்ணியத்தை பயன்படுத்துவதைக் குறித்துக் காட்டு கிறது. காயமடைந்த மனிதனின் பராமரிப்புக்கு கூடுத லாகத் தேவைப்படும் எந்தவொரு செலவையும் ஈடுசெய்வதாக அவர் உறுதியளித்தது, ஆயிரம் வருட யுகத்தில் மனிதர்களின் தன்னிச்சையான மீறுதல் களுக்காக கோரும் ஈடுசெய்தல் கோரிக்கைகளை பூரண கிறிஸ்துவே முழுமையாக ஏற்று சரிசெய்வதாக நீதிக்கு அளித்த வாக்குறுதியைக் குறித்துக்காட்டுகிறது.

நாமும் தாராளமாகக் கொடுக்க வேண்டும்

சமாரியன் சத்திரத்திற்கு வந்தபோது, அவன் தனது பணப் பையைத் திறந்து, அந்த மனிதனின் அறைக்கும் போஜனத்திற்குமான செலவையும், பயணத்தின் போது சுற்றிவந்ததால் நேரிட்ட தனது கூடுதல் செலவுகளையும் ஈடுசெய்தான். அவனே அந்த மனிதனை கவனித்துக் கொண்டான் – அவனது காயங்களைக் கழுவி கட்டுப் போட்டு, அவனுக்கு உண்ண உணவளித்து, ஓய்வெடுப்ப தற்காக அவனை ஒரு படுக்கையில் படுக்க வைத்தான். அவனுடைய தற்போதைய செலவுகளுக்கு பணம் கொடுத்தது மட்டுமல்லாமல், தனது பணப் பையில் ஆழமாகக் கைப்போட்டு, அந்த மனிதன் மீண்டும் தன் சொந்தக் காலில் நிற்கும் வரை ஏற்படக்கூடிய எந்தச் செலவுக்கும் பொறுப்பேற்று, அவருடைய எதிர்காலப் பராமரிப்புக்கும் பணம் கொடுத்தான். சமாரியன் தன்னிடம் இருந்ததைப் பகிர்ந்து கொண்டான். அவன் தனது சிறந்த



பங்களிப்பைச் செய்தான். தேவைகளைப் பூர்த்தி செய்ய தனது சொந்த உடைமைகளையும் செலவு செய்யத் தயாராக இருந்தான்.

பிலிப்பியர் 4:15–19-ல், அப். பவுல் ஒரு வேதாகமக் கோட்பாட்டை நமக்கு நினைப்பூட்டுகிறார். மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நாம் நமது ஆசீர்வாதங் களைப் பகிர்ந்து கொள்ள விருப்பார்வத்துடன் இருக்கும் போது, தேவன் நமது சொந்தத் தேவைகளை ஈடு செய்வதாக உறுதியளிக்கிறார். உண்மை என்னவென் றால், நம்மிடம் உள்ள அனைத்தும் தேவனுக்குச் சொந்த மானவை, மேலும் அவருடைய மகிமைக்காகவும், அவருடைய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காகவும் நாம் உக்கிராணக்காரராக அழைக்கப்பட்டிருப்பது அவரிட மிருந்து நமக்குக் கிடைத்த பாக்கியமாகும். (1 பேதுரு 4:10). உதாரத்துவமான இருதயம் தேவனுக்கு சுகந்த வாசனை-யாக ஏறெடுக்கப்படும் பலி!

நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ, அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்று இயேசு கூறியிருக்கிறார், ஆகவே நாம் தாராளமாகக் கொடுக்க வேண்டும். (லூக்கா 6:38). நம்மிடம் இருப்பதிலிருந்து கொடுக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்பதற்கு சமாரியனின் தாராள மனப்பான்மை ஒரு சிறந்த உதாரணமாகும். நம்மிடமுள்ள சிறந்ததை நாம் கொடுக்க வேண்டும், உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்ய மட்டுமல்ல, மற்றவர்களுக்கு செலவு செய்யவும் விருப் பார்வத்துடன் இருக்க வேண்டும். இது சரீர ரீதியான தேவைகளுக்கு மட்டுமல்ல, ஆவிக்குரிய தேவைகளுக்-கும் பொருந்தும்.

மற்றவர்களுக்கு செலவு செய்ய உங்களிடம் ஆவிக் குரிய ரீதியாக என்ன இருக்கிறது? தேவன் உங்கள் வாழ்க்கையில் என்ன செய்திருக்கிறார்? அவர் உங்க-ளுக்கு என்ன கற்பித்தார்? அவர் உங்களை எத்தகைய அனுபவங்கள் வழியாகக் கொண்டு வந்திருக்கிறார்? நமது சரீர ரீதியான ஆசீர்வாதங்களையும் உடைமை-

களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அழைக்கப் பட்டதைப் போலவே, நமது ஆவிக்குரிய ஆசீர்வாதங் களையும் நாம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரே பகுதியில் வசிக்கும் யூதரையும் சமாரியரையும் கருத்தில் கொண்டால், அவர்கள் புரிதலில் இரு துருவங் களாக வேறுபட்டிருந்தனர். யூதருக்கும் புறஜாதியினருக்-கும் இடையில், ஒருவரைப் பற்றி ஒருவர் கொண்டிருந்த கண்ணோட்டத்தில் ஒருவிதப் பகைமை நிலவியது. புறஜாதியினரின் பார்வையில், யூதர்கள் பெருமிதம் மிக்கவர்களாகவும், பிரத்தியேகமானவர்களாகவும், தனது மதவாதத்தில் அகங்காரம் கொண்டவர்களாகவும், உண்மையான உலகத்திலிருந்து தனிமைப்பட்டவர்-களாகவும் இருந்தனர். யூதரின் பார்வையில், புறஜாதி-யினர் அசுத்தமானவர்கள் – தீட்டானவர்கள் மற்றும் எந்த மதிப்பும் இல்லாதவர்கள்; தேவன் யூதர்களை மாத்திரம் நேசித்தார் – மீதமுள்ளவர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கலாம் என்றும் கருதினர்.

பூமியின் சகல ஜாதிகளுக்கும் தங்கள் மூலம் வரவிருக்கும் ஆசீர்வாதத்தைப் பற்றி இஸ்ரயேலர் தங்கள் தேவனுடைய வார்த்தையில் (பதில்கள் வழங்கப் பட்ட இடம்) வாசிக்கிறார்கள் என்பதை நாம் புரிந்து கொள்கிறோம்; அவர்கள் கிருபையின் வாய்க்காலாக மனுக்குலத்திற்கு ஊழியம் செய்வதற்கான தங்கள் எதிர்கால வாய்ப்பை மறந்து, அதற்குப் பதிலாக வெளி உலகத்தை அதாவது கோயிம் (goyim - தேசங்கள்) பற்றி தேவனுடைய பார்வையில் அவர்களைக் குறைவாக மதிப்பிடும் கண்ணோட்டத்தை அதற்கு மாற்றாக வைத்துக்கொண்டனர். சமாரியன் மிகவும் குறைவாகவே மதிக்கப்பட்டான். (யோவான் 8:48-49-ஐப் பார்க்கவும்).

சமாரியர்கள் யூத கலாச்சாரத்தையும் அவர்களுக் கொத்த நம்பிக்கைகளையும் ஏற்றுக்கொண்டிருந்தாலும், அவர்கள் ஒரு கலப்பின ஜனங்களாக இருந்தனர்; அதனால், யூதர்களால் சகித்துக்கொள்ள முடியாத – இங்கும் இல்லாத, அங்கும் இல்லாத – ஒரு வகையான நிலையில் அவர்கள் இருந்தனர். இயேசு – ஒரு யூதர் – இந்தக் கருத்தை வெளிப்படுத்தவில்லை என்பது அவரது "நல்ல" சமாரியனைப் பற்றிய உவமைக் கதையிலிருந்து தெளிவாகிறது – இது அவரிடம் கேட்டுக்கொண்டிருந்த யூதர்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. (லூக்கா 10:25-37).

ஒரு நல்ல கதை சொல்லுபவர் எப்போதும் சமூகத்தில் மிகவும் மதிக்கப்படுபவராகக் கருதப்படுகிறார். இயேசு உவமைகளில் பேசும் போது மிகச் சிறந்தவர்களில் ஒருவராக இருந்தார். இயேசு பல சந்தர்ப்பங்களில் தமக்கு செவி கொடுப்பவர்களிடம் உவமைகளினால் பேசினார். இந்த தத்ரூபமான சித்திரமாக அறிவிக்கப்பட்ட செய்தி



அன்றாட வாழ்க்கையின் வார்த்தைகளைப் பயன்படுத்தி உண்மைகளை வெளிப்படுத்தியது. எபிரேய மொழியுடன் கூடுதலாக இயேசுவானவர் பேசியிருக்கும் அராமிக் மொழி, உருவகங்களின் செழுமைக்கு பெயர் பெற்றது, ஆகையால் இயேசு தாமே சொற்பொழிவாற்றிய போது ஜனங்களால் அவை எளிதில் புரிந்துகொள்ளப்பட்டிருக்-கும். உருவகத்தின் சக்தி "ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமமானது."

நம் ஆண்டவரின் உவமைக் – கதைகள் வாய்ச் சொற்களாலான சித்திரங்களாகவும், வார்த்தைகளிலான நாடகங்களாகவும் இருந்தன. அவை நீண்ட காலம் நிலைத்திருந்து நமது காலத்திற்கும் வந்துள்ளதைக் கருத்தில் கொள்ளும்போது, அவை நிச்சயமாக அவருக்கு செவிகொடுத்தோரைக் கவர்ந்து மகிழ்வித்திருக்கும். இரண்டு தலைமுறைகளுக்கு முன்பு, கிறிஸ்தவ நாடு-களில் உள்ள பெரும்பாலான ஜனங்கள் உவமைகளின் வார்த்தைகளை நன்கு அறிந்திருப்பார்கள். "கோதுமை-யும் களைகளும்," "செம்மறியாடுகள் வெள்ளாடுகள்," "ஐசுவரியவானும் லாசருவும்" மற்றும் "நல்ல சமாரியன்" ஆகியவை பொது ஜனங்கள் தங்களுடைய வாழ்க் கையை நேர்த்தியாக ஆயத்தம் செய்ய வேதாகமத்தைப் பற்றிய அடிப்படை புரிதல் அவசியம் எனக் கருதப்பட்ட ஒரு சமூகத்தில், அவை வேதாகமத்திலிருந்து தோன்றிய தாக அங்கீகரிக்கப்பட்ட வெளிப்பாடுகளாகும்.

நமது நவீன உலகம் கட்டமைக்கப்பட்ட விதம் இயேசுவின் நாட்களில் இருந்ததைவிட மிகவும் வித்தியாச மானது. அவரது உவமைகளில் பல அவருக்கு செவி கொடுத்தவர்களில் பெரும்பாலானோர் ஈடுபட்டிருந்த விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தன. இவர்கள் "சாதாரண பொதுமக்கள்," பெரும்பாலும் கல்வியறிவு இல்லாதவர்களாயிருந்தனர்; நம் கர்த்தரை-யும் அவருடைய செய்தியையும் நிராகரித்து, அவருடைய போதனைகளை இகழ்ந்து பேசும் அறிஞர் வர்க்கத்தின் ஆடம்பரம் மற்றும் கௌரவம் இல்லாதவர்களா-யிருந்தனர். அசாதாரண மனிதரான நம் கர்த்தர், சாதாரண ஜனங்களுடன் தொடர்பு கொள்ளக் கூடியவராக இருந்தார். அவர் இதை உவமையின் மூலம் செய்தார்.

"அநேக ஜனங்கள் அவருடைய உபதேசத்தை விருப்பத்தோடே கேட்டார்கள்" (மாற்கு 12:37). அன்பான சகோதரர்-களே, நாமும் சாதாரண ஜனங்களாகவே இருக்கிறோம்!

இது ஒரு கேள்வியை எழுப்புகிறது: உவமைகள் மூலம் போதித்த அந்த நீண்ட பயணத்தின் போது இயேசு ஆவியில் மகிழ்ந்தாரா? இயேசுவின் வாழ்க்கை ஓய்வில்-லாத ஒன்றாக இருந்தது, மேலும் அவ்வப்போது வழியை ஆயத்தம் பண்ண அவர் இரண்டு இரண்டு பேராக அனுப்பிய சுவிசேஷகர்கள், இயேசுவிடமும் அப்போஸ் தலர்களிடமும் தங்கள் ஊழியத்தைப் பற்றி அறிவிக்கத் திரும்பினர். அவர்கள் மகிழ்ச்சியுடன் வந்து, **"உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது"** என்று ஆச்சரியத்துடன் கூறினார்கள். (லூக்கா 10:17). **"அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்தார்"** என்று லூக்கா 10:21 கூறுகிறது.

குறிப்பாக இரண்டு விஷயங்களுக்கு அவர் நன்றி தெரிவித்தார்: ஆழமான சத்தியங்கள், கல்விமான்-களுக்கும், உலக ஞானிகளுக்கும் மறைக்கப்பட்டு, பாலகரைப் போல நம்பிக்கை கொண்டவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டன. பின்பு இயேசு தமது சீஷரிடத்தில் திரும்பி, **"நீங்கள் காண்கிறவைகளைக் காணுங் கண்கள் பாக்கியமுள்ளவைகள்"** என்று அமைதியாகக் கூறினார். (வசனம் 23).

இந்தக் கடைசிப் பயணம் படிப்படியாக நிறை-வடையும் போது, லூக்கா 12:50-ல், வரவிருக்கும் அழிவைக் குறித்ததான நிழல் இவ்வாறு கொடுக்கப் பட்டுள்ளது, **"ஆகிலும் நான் முழுக வேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ நெருக்கப்படுகிறேன்!"** யோர்தானில் கர்த்தர் தமது தண்ணீர் ஞானஸ்நானத்தால் அடையாளப்படுத்திய பிரதிஷ்-டையை நிறைவுசெய்ய மூன்றரை வருட ஊழியம் முழுவதும் தேவைப்பட்டது, மேலும் அவர் உறுதியுடன் எருசலேமை, தனது சொந்த முடிவை, அதற்கு அப்பால் தாம் மீட்க வந்த உலகத்தின் முடிவை நோக்கிப் பார்த்தபோது, பதற்றமும் எதிர்பார்ப்பும் நாளுக்குநாள் அதிகரித்து வந்தது.

ஒருவரை நல்ல சமாரியனாக மாற்றுவது எது என்று நாம் நியாயமாகக் கேட்க வேண்டும்? ஒரு நல்ல சமாரியன் என்பவன் எந்தப் பலனையும் எதிர்பார்க்காமல், தனது அயலானுக்கு இரக்கத்துடன் நன்மையான செயல்களைச் செய்பவன். நமது அயலானை நேசிக்கும் பிரமாணம் மத்தேயு 22:39-ல் காணப்படுகிறது: **"உன்னிடத்தில் நீ அன்புகூருவது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக."** நம் அயலானிடம் நாம் கொண்டிருக்க வேண்டிய கடமை அன்பு, நாம் நம் மீது வைத்திருக்க வேண்டியதைப் போன்றது. இது ஒரு பழைய கேள்வியை



நம் நினைவுக்குக் கொண்டுவருகிறது, நியாயசாஸ்திரி-களில் ஒருவர் இயேசுவிடம் இவ்வாறு கேட்டார் - **"எனக்குப் பிறன் யார்?"** சகோதர சிநேகத்தைப் புரிந்துகொள்ள, நமக்குப் பிறன் யார் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். நல்ல சமாரியனின் கதையைச் சொன்ன பிறகு, **"கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்று பேரில் எவன் பிறனாயிருந்தான்?"** என்று இயேசு கேட்ட போது, நியாயசாஸ்திரியின் பதிலிலிருந்து பலர் தவறான முடிவை எடுத்துள்ளனர். நமக்கு நன்மை செய்பவரைத் தவிர வேறு யாரும் நமக்கு அயலான்/பிறன் இல்லை என்று பலர் நியாயசாஸ்திரியின் பதிலிலிருந்து நினைக் கிறார்கள். இந்த முடிவு தவறானது மற்றும் சூழ்நிலை-களைப் பற்றிய தவறான புரிதலிலிருந்து வருகிறது.

சூழ்நிலையைக் குறித்த நினைவை நமது மனதில் புதுப்பித்துக் கொள்வோம் (லூக்கா 10:25-37): இயேசு-விடம் வந்த இந்த நியாயசாஸ்திரி ஒரு யூதர், ஒரு யூதராக அவர்கள் எந்த வகையிலும் யூதரல்லாத புறஜாதியினரோ அல்லது பாதியளவு யூதர்களாக இருந்த சமாரியர்களோ அவனுடைய பிறன் என்று நம்பவில்லை. ஒருவர் வெள்ளையாக, கறுப்பாக, சிவப்பாக, பழுப்பு நிறமாக அல்லது மஞ்சள் நிறமாக இருந்தாலும், அடிமையாக அல்லது சுயாதீனராக, ஆணாக அல்லது பெண்ணாக, நண்பராக அல்லது பகைவராக, தெரிந்தவராக அல்லது தெரியாதவராக; சொந்த நாட்டவராக அல்லது அந்நிய நாட்டவராக இருந்தாலும், அனைவரும் நம் பிறனே என்பதே இயேசுவின் எண்ணமாக இருந்தது. எனவே, இயேசு ஒரு உவமை கதையைச் சொன்னார், அது இந்த யூத நியாயசாஸ்திரி அறிந்த ஒருவன் அவனைப் பிறன் என அழைக்கமாட்டான் என்பதை, அந்த நியாயசாஸ்திரி ஒப்புக்கொள்ளும் படி நிர்ப்பந்திக்கும் என்பது அவருக்குத் தெரியும்; உண்மையில் அவனே அவனுடைய பிறனாக இருந்தான்.

ஆசாரியனும் லேவியனும் தங்கள் சகோதரனாகிய யூதனை உதவியின்றி விட்டுச் சென்றதையும், சமாரியன் எவ்வாறு அவனுக்கு தேவையில் உதவி செய்தான் என்பதையும் இயேசு கூறிய பிறகு, **"கள்ளர் கையில் அகப்பட்டவனுக்கு இந்த மூன்றுபேரில் எவன் பிறனாயிருந்தான்?"** என்று அவர் கேட்ட கேள்வியின் மூலம் -

கள்ளர்களிடம் அகப்பட்ட யூதனுக்கு யூதனல்லாத சமாரியன், பிறன் என்பதை ஒப்புக்கொள்ளும்படி அவர் அந்த நியாயசாஸ்திரியை கட்டாயத்துக்குள்ளாக்கினார்.

இந்தத் தொடர்பிற்கு இசைவாக, இந்த உவமையை நாம் இவ்வழியிலே பார்க்க வேண்டும். தெரியாதவன் அல்லது அந்நிய நாட்டவனுங்கூட அனைவரும் நமக்குப் பிறன் என்பதை இது நமக்குக் காண்பிக்கிறது. அப்படியானால், **"நமக்குப் பிறன் யார்?"** என்ற கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, நம்முடைய மனுக்குலத்தைப் பொறுத்தவரை, ஆதாமின் ஒவ்வொரு குமாரனும் குமாரத்தியும் நமக்குப் பிறன் என்றும், ஒவ்வொரு உண்மையான கிறிஸ்தவரும், கிறிஸ்துவில் நமக்குப் பிறன் என்றும் பதிலளிப்போம். விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்ட ஒவ்வொருவரும், தேவனுடைய மானிட குமாரன் என்ற கண்ணோட்டத்தில் நமக்குப் பிறனாவார்கள். ஆகவே நம்முடைய சக மனிதர்கள் அனைவரும் நமக்குப் பிறன் என்று வேதாகமம் கற்பிக்கிறது என்பதை இப்போது காணலாம். இந்த பிறர் மூன்று வகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர் – சகோதரர்–கள், உலக மனுக்குலம் மற்றும் நமது சத்துருக்கள். எனவே, நம் சகோதரர்கள் அனைவரும், உலக மனுக்குலத்தினர் அனைவரும் மற்றும் நம்முடைய சத்துருக்கள் அனைவரும் கூட, நமது பிறர் ஆவார்கள்.

கிணற்றினருகே இருந்த ஸ்திரீ, யோவான் 4:5–43

"யாக்கோபு தன் குமாரனாகிய யோசேப்புக்குக் கொடுத்த நிலத்துக்கு அருகே இருந்த சமாரியாவிலுள்ள சீகார் என்னப்பட்ட ஊருக்கு [இயேசு] **வந்தார்."**

"அங்கே யாக்கோபுடைய கிணறு இருந்தது: இயேசு பிரயாணத்தினால் இளைப்படைந்தவராய் அந்தக் கிணற்–றினருகே உட்கார்ந்தார்: அப்பொழுது ஏறக்குறைய ஆறாம் மணி வேளையாயிருந்தது."

"அப்பொழுது சமாரியா நாட்டாளாகிய ஒரு ஸ்திரீ தண்ணீர் எடுக்க வந்தாள். இயேசு அவளை நோக்கி: தாகத்துக்குத் தா என்றார்." இந்த சமாரியப் பெண் தன்னு–டைய மனத்தாழ்மையைக் காண்பித்தது வெளிப்படை–யாகத் தெரிகிறது, மேலும் நம் கர்த்தரும் அவளிடம் பேசினார். ஆம், நம் கர்த்தர் எந்த வகுப்பினருடனும் கலந்து பழகுவதற்கு மிகவும் விருப்பமுள்ளவராக இருந்தார். நம்மால் இயன்றவரை எவ்விடத்திலும் விசுவாச வீட்டாருக்கு ஊழியம் செய்ய வேண்டும், ஆனால் இது சாத்தியமில்லாதபோது, ஒரு வாய்ப்பு கிடைக்குமாயின், நாம் மற்றவர்களுக்கு சில நன்மைகளைச் செய்யவும், அவர்களுக்கு காலப்போக்கில் உதவக்கூடிய வார்த்தை–களைப் பேசவும் முயல வேண்டும். இது, தங்களுக்கு அருளப்பட்ட தயவை ஏதேனும் ஒரு வகையில் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற விருப்பத்தை உணர்த்–துவதோடு அவர்களின் தாராள மனப்பான்மை மீதான நம்பிக்கையின் வெளிப்பாடாகவும், அனைத்து வித இரக்கத்துடன் அணுகுவதற்கான சிறந்த வழிமுறைகளில் ஒன்றாகவும் உள்ளது.

"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடத்தில் கேட்கிறவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்–தண்ணீரைக் கொடுத்திருப்பார் என்றார்." சரீரப்பிரகாரமாக இளைப்படைந்த நம்முடைய கர்த்தருக்கு, இயற்கையான தண்ணீர் தேவைப்பட்டபோதிலும், உயர்ந்த கருத்தில் இளைப்படைந்தவளாகவும், பாவத்தால் மிகவும்–பாரமடைந்தவளாகவும் இருந்த அந்த ஸ்திரீக்கு, ஊற்றாக இருக்கிற நம்முடைய கர்த்தர் தாமே உயிர்ப்பிக்கும் ஜீவத்தண்ணீராகத் தேவைப்பட்டார். வாய்ப்புகள் கிடைக்–கும்போதெல்லாம், நாமும் அனைவருக்கும் ஜீவத் தண்ணீரை வழங்குவோமாக.

நம் ஆண்டவருடைய காலத்திற்கு 14 நூற்றாண்டு–களுக்கு முன்பு தோண்டப்பட்ட யாக்கோபின் கிணறு, 75 அடி ஆழமுள்ளதும், ஏராளமான நீரைக் கொண்ட தாகவும் இருந்ததைப் போலவே, நம்முடைய கர்த்தர் நமக்குக் குடிக்கக் கொடுக்கும் கிணறு ஆழமானது, அதிலிருந்து நாம் மொண்டு எடுக்கும்படி எதுவும் இல்லை. மாறாக புரிதலின் பரிசுத்த ஆவியை உடைய புதிய யுகத்தின் கீழ் நமக்கு அபரிமிதமாய்க் கொடுக்கப் படும். **"அந்த ஆவி எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்கிறது."** (1 கொரிந்தியர் 2:10).

ஒரு யூத ரபிக்கும் ஒரு சமாரிய நாட்டுபுறத்தாளுக்கும் இடையிலான இந்த மகிழ்ச்சிகரமான உரையாடல் பல மதிப்புமிக்க பாடங்களைக் கற்பிக்கிறது.

யூதரும் சமாரியரும் பக்கத்திலிருந்தவர்கள், ஆனால் வேறுபட்ட குருவங்கள்

யூதர்களுக்கும் புறஜாதியினருக்கும் இடையில், ஒருவரையொருவர் பற்றிய கண்ணோட்டத்தினால் ஒரு பகைமை வேரூன்றி இருந்தது. பூமியின் சகல ஜாதி–களுக்கும் தங்கள் மூலம் வரவிருக்கும் ஆசீர்வாதத்தைப் பற்றி இஸ்ரயேலர் தங்களுடைய வேத வசனத்தில் படித்தறிந்திருந்தாலும், அவர்கள் கிருபையின் வாய்க் காலாக மனுக்குலத்திற்கு ஊழியம் செய்வதற்கான தங்கள் எதிர்கால வாய்ப்பை மறந்து, அதற்கு பதிலாக தேவனுடைய பார்வையில் அவர்களை குறைவாகமதிப் பிடும் வெளி உலகத்தின் பார்வையை, அதாவது 'கோயிம்' goyim–தேசங்கள் பற்றிய கண்ணோட்டத்தை



அதற்கு மாற்றாக வைத்துக்கொண்டனர். சமாரியன் அல்லது சமாரியாவை சேர்ந்தவர்கள் மிகவும் குறைவாகவே மதிப்பீடு செய்யப்பட்டனர். (யோவான் 8:48-ஐப் பார்க்கவும்).

இயேசு தண்ணீரைக் கொடுத்தார்

தடைசெய்யப்பட்ட சமாரியப் பகுதியின் வழியாக மேற்கொண்ட வெப்பமான மற்றும் தூசி நிறைந்த பயணத்திற்குப் பிறகு, இயேசு மத்தியான வேளையில் இளைப்பாற ஒரு இடத்தைக் கண்டார். முற்பிதாவாகிய யாக்கோபிடமிருந்து யூத சமூகத்திற்கு வெகுமதியாக வழங்கப்பட்ட அந்த கிணறு, அதன் புத்துணர்ச்சியளிக்கும் ஊற்றுத் தண்ணீருக்கு ("ஜீவ" தண்ணீர்) நன்கு அறியப்பட்ட இடமாகும். இது தண்ணீர் எடுப்பதற்கு மட்டுமல்ல, ஜனங்கள் ஒன்றுகூடி பழகுவதற்கு வசதியான இடமாகவும் இருந்தது. இங்கே இளைப்படைந்தவராய் தாகத்துடன் இயேசு அமர்ந்திருந்தார். தெய்வீக பராமரிப்பினால், இந்த இடத்திற்கு கொண்டு வரப்பட்ட அவர், ஊழியம் செய்ய ஆயத்தமாகவும் இருந்தார்.

அச்சமயம் அவள் வந்தாள். இந்த ஸ்திரீ அறியாமலேயே, பல நூற்றாண்டுகளாக எதிரொலித்து, பாவம் மற்றும் சுயவஞ்சனையால் வாழ்க்கை சீரழிந்து கசப்பாய் மாறிய பலரின் இருதயங்களைத் தொடக்கூடிய, ஒரு கதைக்குள் காலடி எடுத்து வைக்கிறாள்.

இங்கே தண்ணீருக்காக எளிமையாகவும் திடீரெனவும் கூறப்பட்ட இயேசுவின் வேண்டுகோளானது, அசாதாரணமானது அல்ல. அந்த ஸ்திரீ இதுபோன்ற வேண்டுகோளை அடிக்கடி கேட்டிருப்பாள். ஆனால் ஒரு யூதரிடமிருந்தா? அதுவும் ஒரு யூதர் இங்கே என்ன செய்கிறார்? அவளுடைய பதில்களின் ஊடாக ஒருவித கேலித்தனம் இழையோடிக் கொண்டிருக்கிறது. அவள் நம்முடைய கர்த்தரின் வேண்டுகோளை மறுத்தாள் என்று நாம் கருதுவதற்கு எந்தக் காரணமும் இல்லை. உண்மையில், அவர் தம்மை ஒரு சிறிய விதத்தில் அவளுக்குக் கடன் பட்டவராகக் காட்டிக்கொண்டது, உரையாடலைத் தொடர அவருக்கு ஒரு உகந்த வழியை ஏற்படுத்தியது.

இயேசு நேர்த்தியாக சில வார்த்தைகளில், தமது அடையாளத்தையும், அதனைக் கொண்டு அவளை ஆசீர்வதிப்பதற்கான தமது விருப்பத்தையும் தெரிவிக்கிறார்; அதுவே அவளுக்குத் தேவையானதாக இருந்தது.

"நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுத்திருப்பார்" என்று அவர் கூறுகிறார். அந்த ஸ்திரீ, நமது கர்த்தருடைய வாக்குறுதியின் உட்பொருளை அறியாமல் அல்லது அதைப் புரிந்து கொள்ளாமல், மரியாதையுடன் உரையாடலைத் தொடர்ந்தாள், அதே சமயம் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒன்றிரண்டு குத்தலான வார்த்தைகளையும் அவள் சேர்த்துக் கொண்டாள்.

"அதற்கு அந்த ஸ்திரீ: ஆண்டவரே, மொண்டுகொள்ள உம்மிடத்தில் பாத்திரமில்லையே, கிணறும் ஆழமாயிருக்கிறதே, பின்னை எங்கேயிருந்து உமக்கு ஜீவத்தண்ணீர் உண்டாகும்?"

அவளுடைய கேலித்தனம் தெளிவாகத் தெரிகிறது. அவள் தொடர்ந்து, **"இந்தக் கிணற்றை எங்களுக்குத் தந்த நம்முடைய பிதாவாகிய யாக்கோபைப் பார்க்கிலும் நீர் பெரியவரோ? அவரும் அவர் பிள்ளைகளும் அவர் மிருக ஜீவன்களும் இதிலே குடித்ததுண்டே"** என்ற கருத்தை வலியுறுத்துகிறாள்.

ஒரு யூதருக்கு கிட்டத்தட்ட பரிசுத்தமானதாகக் கருதப்படுகிற யாக்கோபு என்னும் பெயரை ("நம்முடைய பிதாவாகிய.....") அவள் புத்திசாலித்தனமாக இங்கே குறிப்பிட்டதையும், அதன் மூலம் அவர்கள் இருவரும் ஒரே முன்னோர் வழி மரபைக் கொண்டவர்கள் என்ற கருத்தை அவள் மறைமுகமாக முன்வைத்ததையும் கவனியுங்கள். இவ்வாறு, பொதுவான தகப்பன்வழி உரிமை கோரலின் மூலம், அவள் அந்த உறவைச் சமன்படுத்தவும், விவாதத்தில் சில அனுகூலங்களைப் பெறவும் முயன்றாள்.

நித்திய ஜீவ தண்ணீர்

கிணற்றை சைகை காட்டி, **"இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக: இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது: நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்தியஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்."**

அற்புதமாக, இயேசு இங்கே யாக்கோபையும் யாக்கோபின் கிணற்றையும் தம்முடனும், தாம் மட்டுமே கொடுக்கக்கூடிய ஜீவத் தண்ணீருடனும் ஒப்பிடுகிறார். ஒரு யூதர், புகழ்பெற்ற யாக்கோபின் மதிப்பை குறைத்துப் பேசுவது, சமாரிய ஸ்திரீயால் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அதிகமாக இருந்தது. நிலைதடுமாற்றத்தில்

அவளுடைய வாதாடும் மனப்பான்மை மெல்ல குறைந்த நிலையில், அவள் இவ்வாறு பதிலளிக்கிறாள், **"ஆண்டவரே, எனக்குத் தாகமுண்டாகாமலும், நான் இங்கே மொண்டுகொள்ள வராமலுமிருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தரவேண்டும் என்றாள்."**

சமாரியர்கள் யார்?

வேதாகமத்தின் வரலாற்றுப் பதிவுகளில் சமாரியர்கள் தங்களின் முக்கியத்துவத்தில் மாறி மாறி அதாவது பின்வாங்கியும் முன்னேறியும் ஓர் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டுப் பதிவுகளில், அவர்கள் ஒரு மையமான – அதே சமயம் சற்றே மதிப்புக் குறைந்த நிலைக்கு வருகிறார்கள். வேதாகமத்தை வாசிப்பவர்–களுக்கு, "சமாரியன்" என்ற இழிச்சொல்லானது அவப் பெயர் பெற்ற "வேதபாரகர்" அல்லது "பரிசேயர்" போலவே நன்கு அறியப்பட்ட ஒன்றாக இருக்கிறது. அக்காலத்தில் ஒரு யூதனுடைய பார்வையில், "நல்ல" சமாரியன் என்ற சொற்றொடரே முரண்பாடான கருத்துடையதாகும். சமாரியர்களுக்காக ஒரு யூதன் கொண்டிருந்த மிகுந்த கருணையுள்ள விருப்பம் அவர்கள் உயிர்த்தெழுதலில் பங்கு பெறக்கூடாது என்பதே!

யூத தேசத்தார் சமாரியர்களைத் தங்களில் ஒருவராக ஏற்றுக்காள்ளவில்லை என்றாலும், சமாரியர்கள் புறஜாதி–யினரிடமிருந்து வேறுபட்ட தனி வகுப்பாகக் குறிப்பிடப் படுகிறார்கள் – அவர்கள் யூதர்களால் விலக்கி வைக்கப் பட்ட பல்வேறு இனக் குழுக்களின் ஒரு கலவையாக இருந்தனர். (மத்தேயு 10:5). யோவான் 4:4–ல் உள்ள குறிப்பு கிட்டத்தட்ட மன்னிப்பு கோருவது போலத் தோன்று கிறது. சமாரியர்கள் யூத பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என உரிமை கோரினாலும், அவர்கள் பல ஜனங்களின் கலவையாகவே இருந்தனர். சமாரியர்கள் பிற பகுதிகளிலிருந்து வந்தவர்கள், யூதர்களுடனான கலப்புத் திருமண உறவுகளிலிருந்தும், யூத மரபுகள் மற்றும் பாரம்பரியங்களைத் தொடர்ந்து ஏற்றுக்கொண்ட–திலிருந்தும் உருவானவர்கள். அவர்கள், மாற்றி–யமைக்கப்பட்ட வடிவத்தில், ஐந்து ஆகமங்களை ஏற்றுக்கொண்டனர், பின்னர் கெரிசீம் மலையில் ஒரு ஆலயத்தைக் கட்டினர். அவர்களுங்கூட மேசியாவை எதிர்பார்த்தனர். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பிய யூதர்களுக்கும் அந்த தேசத்தின் சமாரியர்–களுக்கும் இடையிலான எதிர்ப்படுதல் எஸ்றா 4:2–5–ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சம்பவம் இரு ஜனங்களுக்கும் இடையிலான விரோதப் போக்கை வளர்த்தது, இது காலப்போக்கில் பரஸ்பர வெறுப்பை உறுதிப் படுத்தியது.

கிணற்றருகே இருந்த ஸ்திரீயிடம் இயேசு சொன்ன வார்த்தைகளில் (யோவான் 4:23, 24) குறிப்பிட்டுள்ள–படி, ஒரு பெரும் மாற்றத்திற்கான சூழல் அப்போது உருவாகிக்கொண்டிருந்தது. யூதருக்கும் சமாரியனுக்கும் இடையிலான தடையரண் உடையவிருந்தது. அவர் சமாரியா கிராமங்களில் இரண்டு நாட்கள் தங்கி அன்பான வரவேற்பைப் பெற்றார். அப்போஸ்தலர் (8:1–25) புஸ்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுபோல், ஒரு காலத்தில் தடைசெய்யப்பட்ட சமாரிய கிராமங்களுக்கு, இரட்சிப்பின் வார்த்தை பிலிப்பு, பேதுரு மற்றும் யோவான் ஆகியோ–ரால் கொண்டு செல்லப்பட்டது. சுவிசேஷத்தின் நற்–செய்தியின் சமன்படுத்தும், ஒன்றிணைக்கும் வல்லமை அதன் வேலையைத் தொடங்கியிருந்தது.

கிணற்றருகே இருந்த ஸ்திரீயிடம் நாம் திரும்புவோம்: கிணற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு பாத்திர தண்ணீருக்கு மாற்றாக, சமாரிய ஸ்திரீ ஜீவத் தண்ணீரைப் பெற்றாள். **"ஒரு கலசம் தண்ணீர் கொடுப்பவன், பதிலுக்கு ஒரு கலசம் தண்ணீரைப் பெறுவான்."**

இருப்பினும், ஒருவர் காட்டும் கொடைத்தன்மை/ஈகைகுணம் என்பது, வெறும் பிரதிபலனைப் பெறும் நோக்கில் செய்யப்படும் உபாயம் அல்ல. பெறுவதற்காக நாம் கொடுக்கக்கூடாது. தன்னலமற்ற சேவையினால் வரும் பலன், எதிர்பார்க்கப்படாததாயினும் இயல்பாகவே உண்டாகும் ஒன்றாகும். ஈகைகுணம் மற்றவர்களின் செழிப்பில் நம்மை மகிழ்ச்சியடையச் செய்கிறது. அதன் உயர்ந்த வடிவத்தில் அது மற்றவர்களுக்கு ஆசீர்வாதங்களை வழங்குவதில் மகிழ்ச்சியடையும் ஒரு கருணை–யுள்ள மனப்பான்மையைக் குறிக்கிறது. பிறருக்குக் கொடுப்பதால் ஏற்படும் அந்த மகிழ்ச்சியான பிரதிபலிப்பு, அதைக் கொடுப்பவரால் திட்டமிடப்பட்டதல்ல, மாறாக மனித வாழ்வின் காரியங்களைப் பற்றிய தேவனுடைய உலகளாவிய ஏற்பாட்டில் அவராலேயே தீர்மானிக்கப் பட்டதன் விளைவாகும். நீதியின் பிரமாணங்கள் அத்தகைய விளைவைக் கட்டளையிடுகின்றன; இனிமை–யான விளைவுகள் மீண்டும் மீண்டும் வருவதை ஊக்குவிக்கின்றன என்றும் நாம் கூறலாம். அத்தகைய செயல்முறையால் கிறிஸ்தவனுடைய இருதயம் அன்பி–னால் நிறைவதோடு கிறிஸ்தவ சகோதரத்துவம் உறுதிப்படுத்தப்படுகிறது. உதார குணம் கொடுப்பவரை–யும் பெறுபவரையும் ஆசீர்வதிக்கிறது. (நீதிமொழிகள் 11:18).

கிணற்றருகே அந்த ஸ்திரீ சம்பந்தப்பட்ட சம்பவம், மற்றவர்களைக் கவரும் விதமாகவும் சரியான தருணத்தில் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு ஒரு தனிச் சிறப்பு வாய்ந்த உதாரணமாகவும் கருதப்பட்டாலும், அது இயேசுவின் குணாதிசயத்தை எடுத்துக்காட்டவும் உதவு கிறது.

நம்முடைய கர்த்தர் தமது களைப்பையும் பொருட்படுத்தாமல் ஊழியம் செய்வதில் விழிப்புடன் இருந்தார்,

இதுவே அவரது இயல்பாக இருந்தது. எப்போதும் தெய்வீக சித்தத்திற்கு இசைவாக, அவர் பிதாவின் வழிநடத்துதலை அறிந்துகொண்டு, அதைப் பின்பற்றி, உலகில் பிதாவின் வேலையை முன்னேற்றுவதற்கான எந்தவொரு வாய்ப்பையும் - மற்றும் எல்லா வாய்ப்பு களையும் பயன்படுத்திக் கொண்டார். **"சமயம் வாய்த் தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திரு-வசனத்தைப் பிரசங்கம்பண்ணு."** (2 தீமோத்தேயு 4:2). அவரது வார்த்தையைப் பிரசங்கிப்பதிலும், பொதுவான கிறிஸ்தவ ஊழியங்களிலும் - தேவன் நமக்குக் கொடுக் கின்ற ஊழியத்திற்கான வாய்ப்புகளை - அடையாளம் காண நாம் கற்றுக்கொள்ள வேண்டும், பின்னர் எந்த சந்தர்ப்பத்திலும் அது நமக்கு எவ்வளவு அசௌகரியமாக இருந்தாலும், அதை சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ள நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். **"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக் கிறீர்களே: அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்-படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே"** (2 கொரிந்தியர் 8:9; ஒப்பிடுக. வசனங்கள் 1, 2), **"அன்றியும் சகோதரரே, மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம். அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திர முடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தி-னாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்."** (2 கொரிந்தியர். 8:1-2). உதாரகுணத்தின் மிகச் சிறந்த உதாரணம் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய கர்த்தர், தமது வல்லமை மிக்க சுபாவத்தை விட்டு விட்டு, தம்மைத் தாழ்த்தி பூமிக்கு இறங்கி வந்து, இறுதியில் சிலுவை மரணத்திற்கு வழிவகுத்த அநீதிகளுக்குத் தம்மையே ஒப்புக் கொடுத்தார். "சிலுவையை எடுத்துக் கொள்வது" என்பது கிறிஸ்துவின் பாதைக்கு ஒத்த சொற்றொடராகும், இதில்

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்" (ரோமர் 8:28).

நமது எல்லா அனுபவங்களையும் அனுமதிக்கிற கர்த்தர், அவை அனைத்தின் வழியாகவும் தம்முடைய மகிமையின் வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார்.

ஏனெனில் - **"என்னதான் நேரினும், விசுவாசம் அவரை உறுதியாக நம்ப முடியும்."**

ஒப்பீட்டளவில் சிலரே மேற்கொள்கின்றனர் (மத்தேயு 10:38, 39; மாற்கு 10:17-31). அதன் சாராம்சத்தில், கிறிஸ்தவ ஜீவியம் என்பது சுயத்தை வெறுப்பதும், சுவிசேஷத்தின் பொருட்டு தன்னையே அர்ப்பணிப்பது மாகும் - இது வெறுமனே சில கோட்பாட்டு உபதேசங் களின் தொகுப்பை விளக்குவதைவிட விரிவானது.

சமாரிய ஸ்திரீயுடனான நம் கர்த்தரின் உரையாடல், அதன் முடிவில் முழு மனுக்குலத்திற்கான பொதுவான இரட்சிப்பின் வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்தியது. இது மிக முக்கியமான கருத்தாகும். கிறிஸ்துவுக்குள், இன வேறுபாடுகள் மறைந்துபோகின்றன (கலாத்தியர் 3:28). 1 தீமோத்தேயு 2:1-7-ல் இரட்சிப்பு, அனைவருக்கும் உரியது என்றும், இது தேவ குமாரனால் மத்தியஸ்தம் செய்யப்படும் என்றும் நமக்குச் கூறப்பட்டுள்ளது. இதில், தேவன் உதார குணத்தைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஆகவே நாம் உதாரகுணத்தில் குறைவுள்ளவர்களாக இருக்கலாகாது.

அன்புள்ள சகோதரர்களே, ஆரம்பகால சபையோடு கூட இருந்து அவர்களை வழிநடத்தியவர் அதே வல்ல-மையுடன் நம்முடனும் இருக்கிறார். அந்த அறுவடை காலத்தில் வழிநடத்தியவர் இப்போதும் வழிநடத்திக் கொண்டிருக்கிறார், மேலும் இறுதிவரை தம்முடைய வேலையை வழிநடத்திச் செல்வார். (BS 1991, பக்கம் 29).



வேதாகமம் பேசுகிறது

BIBLE TALKS

ஒரு போதுமே பழைமையாகாத ஒரு புஸ்தகத்திலிருந்து எளிய மொழியில் கதைகள்

எகிப்தின் வாதைகள்

யாத்திராகமம் 6:28-7:13

கர்த்தர் எகிப்துதேசத்திலே மோசேயோடே பேசின நாளில், கர்த்தர் மோசேயை நோக்கி: நானே கர்த்தர்; நான் உன்னோடே சொல்லுகிறவைகளையெல்லாம் நீ எகிப்து ராஜாவாகிய பார்வோனுக்குச் சொல் என்று சொன்னபோது, மோசே கர்த்தருடைய சந்நிதானத்தில்: நான் விருத்தசேதனமில்லாத உதடுகளுள்ளவன்; பார்வோன் எனக்கு எப்படிச் செவிகொடுப் பான் என்றான்.

கர்த்தர் மோசேயை நோக்கி: பார், உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்; உன் சகோதரனாகிய ஆரோன் உன் தீர்க்கதரிசியாயிருப்பான். நான் உனக்குக் கட்டளையிடும் யாவையும் நீ சொல்லவேண்டும்; பார்வோன் இஸ்ரவேல் புத்திரரைத் தன் தேசத்திலிருந்து அனுப்பிவிடும்படி உன் சகோதரனாகிய ஆரோன் அவனிடத்தில் பேசவேண்டும். நான் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தி, எகிப்து தேசத்தில் என் அடையாளங்களையும் அற்புதங்களையும் மிகுதியாய் நடப்பிப்பேன். பார்வோன் உங்களுக்குச் செவி-கொடுக்கமாட்டான்; ஆகையால் எகிப்துக்கு விரோதமாக நான் என் கையை நீட்டி, மகா தண்டனையினால் என் சேனைகளும்

என் ஜனங்களுமாகிய இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணுவேன். நான் எகிப்தின்மேல் என் கையை நீட்டி, இஸ்ரவேல் புத்திரரை அவர்கள் நடுவிலிருந்து புறப்படப்பண்ணும்போது, நானே கர்த்தர் என்று எகிப்தியர் அறிவார்கள் என்றார். மோசேயும் ஆரோனும் கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். அவர்கள் பார்வோனோடே பேசும்போது, மோசேக்கு எண்பது வயதும், ஆரோனுக்கு எண்பத்துமூன்று வயதுமாயிருந்தது.

கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி: உங்கள் பட்சத்திற்கு ஒரு அற்புதம் காட்டுங்கள் என்று பார்வோன் உங்களோடே சொன்னால், அப்பொழுது நீ ஆரோனை நோக்கி: உன் கோலை எடுத்து அதைப் பார்வோனுக்கு முன்பாகப் போடு என்பாயாக; அது சர்ப்பமாகும் என்றார். மோசேயும் ஆரோனும் பார்வோனிடத்தில் போய், கர்த்தர் தங்களுக்குக் கட்டளையிட்டபடி செய்தார்கள். ஆரோன் பார்வோனுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரருக்கு முன்பாகவும் தன் கோலைப் போட்டான், அது சர்ப்பமாயிற்று. அப்பொழுது பார்வோன் சாஸ்திரிகளையும் சூனியக்காரரையும் அழைப்பித்தான். எகிப்தின் மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள். அவர்கள் ஒவ்வொருவனாகத் தன்தன் கோலைப் போட்டபோது, அவைகள் சர்ப்பங்களாயின; ஆரோனுடைய கோலோ அவர்களுடைய கோல்களை விழுங்கிற்று. கர்த்தர் சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப்பட்டது, அவர்களுக்குச் செவிகொடாமற் போனான்.

இரத்தம், தவளைகளினால் உண்டான வாதைகள்

யாத்திராகமம் 7:14-8:15

அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: பார்வோனின் இருதயம் கடினமாயிற்று; ஜனங்களை விடமாட்டேன் என்கிறான். காலமே நீ பார்வோனிடத்துக்குப் போ, அவன் நதிக்குப் புறப்பட்டு வருவான்; நீ அவனுக்கு எதிராக நதியோரத்திலே நின்று, சர்ப்பமாக மாறின கோலை உன் கையிலே பிடித்துக்கொள்.

கையிலே பிடித்துக்கொண்டவாறு அவனை நோக்கி: வனாந்தரத்தில் எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடவேண்டும் என்று சொல்லும்படி எபிரெயருடைய தேவனாகிய கர்த்தர் என்னை உம்மிடத்திற்கு அனுப்பியும், இதுவரைக்கும் நீர் கேளாமற்போனீர். இதோ, என் கையில் இருக்கிற கோலினால் நதியில் இருக்கிற தண்ணீர்மேல் அடிப்பேன்; அப்பொழுது அது இரத்தமாய் மாறி, நதியில் இருக்கிற மீன்கள் செத்து, நதி நாறிப்போம்; அப்பொழுது நதியில் இருக்கிற தண்ணீரை எகிப்தியர் குடிக்கக்கூடாமல் அரோசிப் பார்கள்; இதினால் நானே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

நதிகள் ரத்தமாய் மாறுதல்

மேலும், கர்த்தர் மோசேயை நோக்கி: நீ ஆரோனிடத்தில் உன் கோலை எடுத்துக்கொண்டு எகிப்தின் நீர்நிலைகளாகிய அவர்கள் வாய்க்கால்கள்மேலும் நதிகள்மேலும் குளங்கள்மேலும் தண்ணீர் நிற்கிற எல்லா இடங்கள்மேலும், அவைகள் இரத்தமாகும்படிக்கு, உன் கையை நீட்டு; அப்பொழுது எகிப்துதேசம் எங்கும் மரப் பாத்திரங்களிலும் கற்பாத்திரங்களிலும் இரத்தம் உண்டாயிருக்கும் என்று சொல் என்றார். கர்த்தர் கட்டளையிட்டபடி மோசேயும் ஆரோனும் செய்தார்கள்; பார்வோனுடைய கண்களுக்கு முன்பாகவும், அவன் ஊழியக்காரரின் கண்களுக்கு முன்பாகவும் கோலை ஓங்கி, நதியிலுள்ள தண்ணீரை அடிக்க, நதியிலுள்ள தண்ணீரெல்லாம் இரத்தமாய் மாறிப் போயிற்று. நதியின் மீன்கள் செத்து, நதி நாறிப்போயிற்று; நதியின் தண்ணீரைக் குடிக்க எகிப்தியருக்குக் கூடாமற்போயிற்று, எகிப்துதேசமெங்கும் இரத்தமாயிருந்தது. எகிப்தின் மந்திர வாதிகளும் தங்கள் மந்திரவித்தையினால் அப்படிச் செய்தார்கள்; கர்த்தர்சொல்லியிருந்தபடி பார்வோனின் இருதயம் கடினப் பட்டது. அவர்களுக்குச் செவிகொடாமற் போனான்.

பார்வோன் இதையும் சிந்தியாமல், தன் வீட்டிற்குத் திரும்பிப்போனான். நதியின் தண்ணீர் குடிக்க உதவாதபடியால், குடிக்கத்தக்க தண்ணீருக்காக எகிப்தியர் எல்லாரும் நதியோரத்தில் ஊற்றுத் தோண்டினார்கள்.

கர்த்தர் நதியை அடித்து ஏழு நாள் ஆயிற்று. அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: நீ பார்வோனிடத்தில் போய்: எனக்கு ஆராதனைசெய்ய என் ஜனங்களை அனுப்பிவிடு. நீ அவர்களை அனுப்பிவிடமாட்டேன் என்பாயாகில், உன் எல்லை அடங்கலையும் தவளைகளால் வாதிப்பேன். நதி தவளைகளைத் திரளாய்ப் பிறப்பிக்கும்; அவைகள் உன் வீட்டிலும் உன் படுக்கை அறையிலும், உன் மஞ்சத்தின்மேலும், உன் ஊழியக்காரர் வீடுகளிலும், உன் ஜனங்களிடத்திலும், உன் அடுப்புகளிலும், மாப்பிசைகிற உன் தொட்டிகளிலும் வந்து ஏறும். அந்தத் தவளைகள் உன்மேலும், உன் ஜனங்கள்மேலும், உன் ஊழியக்காரர் எல்லார்மேலும் வந்து ஏறும் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று சொல் என்றார்.

மேலும் கர்த்தர் மோசேயினிடத்தில் நீ ஆரோனை நோக்கி: நீ உன் கையில் இருக்கிற கோலை நதிகள்மேலும் வாய்க்கால்கள்மேலும் குளங்கள்மேலும் நீட்டி, எகிப்துதேசத்தின்மேல் தவளைகளை வரும்படி செய் என்று சொல் என்றார். அப்படியே ஆரோன் தன் கையை எகிப்திலுள்ள தண்ணீர்கள்மேல் நீட்டினான்; அப்பொழுது தவளைகள் வந்து, எகிப்துதேசத்தை மூடிக்கொண்டது. மந்திரவாதிகளும் தங்கள் மந்திரவித்தை யினால் அப்படிச் செய்து, எகிப்துதேசத்தின்மேல் தவளைகளை வரப்பண்ணினார்கள்.

பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைப்பித்து: அந்தத் தவளைகள் என்னையும் என் ஜனங்களையும் விட்டு நீங்கும்படி கர்த்தரை நோக்கி வேண்டிக்கொள்ளுங்கள்; கர்த்தருக்குப் பலியிடும்படி ஜனங்களைப் போகவிடுவேன் என்றான். அப்பொழுது மோசே பார்வோனை நோக்கி: தவளைகள் நதியிலேமாத்திரம் இருக்கத்தக்கதாய் அவைகளை உம்மிடத்திலும் உம்முடைய வீட்டிலும் இல்லாமல் ஒழிந்து போகும்படிசெய்ய, உமக்காகவும் உம்முடைய ஊழியக்காரருக் காகவும் உம்முடைய ஜனங்களுக்காகவும் நான் விண்ணப்பம் பண்ணவேண்டிய காலத்தைக் குறிக்கும் மேன்மை உமக்கே இருப்பதாக என்றான். அதற்கு அவன்: நாளைக்கு என்றான். அப்பொழுது இவன்: எங்கள் தேவனாகிய கர்த்தருக்கு ஒப்பானவர் இல்லை என்பதை நீர் அறியும்படிக்கு உம்முடைய வார்த்தையின்படி ஆகக்கடவது.

தவளைகள் உம்மையும் உம்முடைய வீட்டையும் உம்முடைய ஊழியக்காரரையும் உம்முடைய ஜனங்களையும் விட்டு நீங்கி, நதியிலேமாத்திரம் இருக்கும் என்றான். மோசேயும் ஆரோனும் பார்வோனை விட்டுப் புறப்பட்டார்கள். பார்வோனுக்கு விரோதமாக வரப்பண்ணின தவளைகள் நிமித்தம் மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். கர்த்தர் மோசேயின் சொற்படி செய்தார்; வீடுகளிலும் முற்றங்களிலும் வயல்களிலும் இருந்த தவளைகள் செத்துப்போயிற்று. அவைகளைக் குவியல் குவியலாகச் சேர்த்தார்கள்; அதினால் பூமியெங்கும் நாற்றம் எடுத்தது. இலகுவுண்டாயிற்றென்று பார்வோன் கண்டபோதோ, தன் இருதயத்தைக் கடினப்படுத்தி, அவர்களுக்குச் செவி-கொடாமற்போனான்; கர்த்தர் சொல்லியிருந்தபடி ஆயிற்று.

LHMM - வெளியீடு



இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவருக்கும்

அவருக்கு பயப்படுகின்ற சிறியோரும் பெரியோருமாகிய
அவருடைய பிரதிஷ்டைசெய்த ஊழியக்காரர்களின் நலனுக்காகவும்
கர்த்தரை எங்கும் தொழுதுகொள்ளுகிற அனைவருக்காகவும்,
அதாவது, விசுவாச வீட்டாருக்காகவும்,
தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்காகக் காத்துக்
கொண்டிருந்து தவித்துப் பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டிக்காகவும்

இந்த வேலை அர்ப்பணம் செய்யப்படுகிறது.

கர்த்தருக்குள் அன்பான சத்திய சகோதர சகோதரிகள் யாவருக்கும் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி! நாம் நீண்ட காலமாக ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இந்த புஸ்தகத்தை (WPRW) வெளியிட கிருபை செய்த தேவனுக்கு நன்றி கூறுகிறேன். வேத ஆராய்ச்சியாளர்களுக்கும் சத்தியத்தை நேசிக்கிறவர்–களுக்கும் இப்புஸ்தகம் அருமையான ஆவிக்குரிய ஆகாரமாகும். இப்புஸ்தகத்திலுள்ள சத்தியங்களை வாசிக்கிற, தியானிக்கிற யாவருக்கும் இது மிகுதியான ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மொத்தம் 840 பக்கங்கள்.

ஒரு புஸ்தகத்தின் விலை: ரூ.450

இந்த புஸ்தகம் தேவைப்படுபவர்கள் கீழ்க்காணும் முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.

Visit us at : **www.biblestandardindia.com**

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Laymen's Home Missionary Movement

Bro. V. Vincent Jeyakumar

[Representative of India]

#4/81, Eluvaraimukki Main Road, Eluvaraimukki Post, Near Thoppur,
Nazareth - 628 617, Thoothukudi District, Tamil Nadu, India.
E-mail ID : vincentlhmm@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY